Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)


முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 08 திங்கட்கிழமை (24.09.2012) பக்கங்கள் 20 ஓசை - 358













# நாடு உடையாமலிருக்க அதிகாரத்தை பகிருங்கள்



## கூறுகிறார் றொகான்

(கொழும்பு)

இலங்கை மீதான சர்வதேசத்தின் தலையீடுகளைத் தடுக்கும் வகையிலும், இனரீதியாக, மதரீதியாக நாடு உடைவு காண்பதற்கு முன்னரும் மத்திய அரசாங்கத்திடமுள்ள அதிகாரங்கள் சமூகங்களுக் கிடையில் பகிரப்பட்டு சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை ஏற்படுத்தப்பட வேண்டுமெனப் பயங்கரவாதம் தொடர்பான சர்வதேசப் பாதுகாப்பு நிபுணர் றொகான் குணரத்ன அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் பிரதம மந்திரி, அமைச்சர்கள், நிரந்தர செயலாளர்கள் மற்றும் கூட்டுப்படைகளின் தலைமையதிகாரி போன்ற பதவிகள் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்து உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்கம் இந்திய புதுடில்லி அரசாங்கத்துடன் உறவைக்கொண்டிருக்கின்ற போதும் தமிழகத்துடன் உறவை மேம்படுத்திக் கொள்ளவில்லை.

இதன்காரணமாக தமிழகத்தில் இருந்து இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்ப்பலைகள் எழுகின்றன.

தற்போதைய 19 ஆம் பக்கம் பார்க்க

## மர்மப் பொருள் வெடித்து மூன்று சிறுவர்கள் காயம்

(மன்னார்)

பற்றைக்குள் கிடந்த மர்மப் பொருளினை எடுத்து விளையாடியவேளை அது வெடித்ததனால் மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

மன்னார், தலைமன்னார் பிரதேசத்தின் பியர் பகுதிக் கடற்கரைக்கு அண்மையாக நேற்றையதினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடை 19 ஆம் பக்கம் பார்க்க

## மாகாணசபை ஆட்சிமுறையை விரும்பாத கிழக்கு முதல்வர்

(மட்டக்களப்பு)

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் அவசியமில்லை எனவும் இலங்கை சிறிய நாடு என்பதால், மாகாண சபை ஆட்சி முறையைத் தாம் விரும்பவில்லை எனவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

வாராந்தப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது 19 ஆம் பக்கம் பார்க்க

## அவுஸ்ரேலியா செல்ல முயற்சி வடமராட்சிக் கடலில் 46 பேர் கைது

(பருத்தித்துறை)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா செல்ல முயன்ற 46 பேர் நேற்று அதிகாலை வடமராட்சி பொலிகண்டி கடற் பகுதியில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இவர்கள் பயணம் செய்த படகு வழிமறிக்கப்பட்டு அதிலிருந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைதானவர்களில் 41 தமிழர்களும், 4 முஸ்லிம்களும், ஒரு சிங்களவரும் 19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்புக் குறித்த செய்திகளை ஆராய்வது சிக்கலான விடயம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக செய்திகள் தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்களில் வெளிவருகின்றன. அவற்றின் போக்குகளை ஒரு முகப்படுத்தி ஆராய்வதென்பதே சிக்கலான விடயம். இந்நிலையில்தான் ஊடக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற 'வெரிடே ரிசேர்ச்' நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுமந்திரன் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,

"வெரிடே றிசேர்ச்" ஆய்வு நிறுவனத்தில் எந்த மொழி சார்ந்தவர்கள் வேலை செய்கின்றார்கள் என்பதல்ல அவர்களின் ஆய்வு பற்றிய நுணுக்கங்களே எமக்கு தேவையாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான செய்திகளின் ஆய்வுத் தொகுப்புகளை மாத்திரமே பெறுவதற்காக அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.'

இவ்வாறான ஒப்பந்தம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



மாதம் ஒருமுறை அல்லது இரு மாதங்களுக்கு ஒரு முறை என்ற ரீதியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக அனைத்து மொழி ஊடகங்களின் பார்வை பற்றிய தொகுப்பினை எமக்கு இந்த நிறுவனம் வழங்கி வருகின்றது.

இந்த ஆய்வினூடாக தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்கள் 19 ஆம் பக்கம் பார்க்க

## வருட இறுதியில் இலங்கைக்கு வருகிறார் நவநீதம்பிள்ளை

(கொழும்பு)

ஒருவார கால பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பிரதிநிதிகள் தமது பணிகளை நிறைவு செய்து நேற்று முன்தினம் ஜெனிவா திரும்பியுள்ள நிலையில் இந்த ஆண்டு பிற்பகுதியில் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய, ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர் வரும் மார்ச் மாதம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய நிலையிலேயே உண்மை கண்டறியும் குழு இலங்கை வந்ததாகக் கொழும்பிலுள்ள ஐ,நா. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவினர் அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, ஜி.எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம், பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஈ.பி.டி.பி.பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியிருந்தனர்.

ஐ.நா. மனிதஉரிமைகள் 19 ஆம் பக்கம் பார்க்க



## முன்னாள் புலி உறுப்பினர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் ஆயிரத்து 200 முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக இவ்வாண்டு இறுதிக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாதவர்ளை சமூகமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் பாலித்த பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர்கள் தொடர்பான விரிவான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்கமாட்டார்

### உறுதிப்படுத்தினார் பந்துல

(கொழும்பு)

ஐ.நா. பொதுச்சபையின் 67 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளமாட்டாரெனவும் அவருக்குப் பதிலாக இலங்கைக் குழுவிற்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தலைமை தாங்கவுள்ளதாகவும் ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதை உறுதி செய்திருந்த போதும், திடீரென அதிலிருந்து விலகிக் கொண்டுள்ளார்.

வரும் 26 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் அமர்வில் அவருக்கு உரையாற்றுவதற்காக நேரம் ஒதுக்கப்பட்டிருந்த நிலையிலேயே திடீரென அவர் இந்தப் பயணத்தைக் கைவிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், எல்லாப் பொதுச்சபைக் கூட்டங்களிலும் பங்கேற்று வந்துள்ளார்.

அவர் பொதுச்சபைக் கூட்டத்தைத் தவறவிடும் முதல் சந்தர்ப்பம் இதுவேயாகும்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட பந்துல ஜயசேகர, ஜனாதிபதி இதற்கு முன்னைய கூட்டங்களில் இலங்கைக் குழு 19 ஆம் பக்கம் பார்க்க

# பாடசாலை ஆசிரியர்களுக்கு குறைவடைந்து வரும் சிறப்பு



(நீர்வேலி)

தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்குரிய சிறப்பு, பாடசாலை ஆசிரியர்களுக்கு தற்போது இல்லாமல் இருப்பது ஒரு துயரமான சம்பவம் என்று கவலை வெளியிட்ட ஓய்வு நிலை ஆசிரியர் பஞ்சாட்சரம், எதிர்காலத்தில் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் சிறப்பு இல்லாத நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினத்திலும் பரிசளிப்பு விழாவிலும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பிள்ளைகளை பெற்றோர் நல்வழியில் பயிற்றுவிக்க வேண்டும் என்றும் மாணவர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற மந்திரத்திற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவிற்கும் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொண்டார். இக் கல்லூரியின் நிறுவுநர் நினைவுப் பேருரையை பழைய மாணவரும் இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளருமாகிய சி.கௌரி சங்கர் ஆற்றினார்.

பரிசளிப்பு விழாவில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரை திறமையாகச் செயற்பட்டவர்களுக்கும், கடந்த வருட 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்கள், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினை வெளிக்காட்டியவர்கள், பாடசாலை உச்ச வரவு ஒழுங்குக்கு உட்பட்டவர்கள், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் தடகள வீரர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் தமிழ்த்தினப் போட்டி மற்றும் திருக்குறள் மனனப் போட்டி, அழகியற் போட்டி, கட்டுரைப்போட்டி, துரித கணித செய்கைப்போட்டி, சைவநெறி மாணவர் திறன் மதிப்பீட்டுப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி வணிக அறிவுப் போட்டி ஆகிய போட்டிகளில் முன்னிலை வகித்தவர்களுக்கான விசேட பரிசில்களும் வழங்கப்பட்டன.

# ஒரே வீட்டில் 2 நாட்கள் திருட்டு

(கரணவாய்)


வடமராட்சி கரணவாய் தெற்கு பிரதேசத்தில் உள்ள ஆலய குருக்கள் ஒருவரின் வீட்டில் கடந்த புதன்கிழமை திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் குருக்களும் தாக்கப்பட்டுள்ளார்.

குறித்த தினத்தன்று நள்ளிரவு வீட்டிற்குள் புகுந்த மர்மநபர்கள் திருட முற்பட்ட வேளை குருக்கள் தற்செயலாக நித்திரையில் எழுந்தநிலையில் திருடர்களைக் கண்ட அவர் திருடர்களுடன் சண்டையில் ஈடுபட்டார். அத்துடன் அவர் கூக்குரலிட்டதைக் கண்ட அயலவர்கள் ஓடிவந்து பார்த்த போது திருடர்கள் குருக்களை தாக்கிவிட்டு ஓடி மறைந்து விட்டனர்.

பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருடர்கள் அவரின் வீட்டிற்குள் புகுந்து அவருடைய சைக்கிளையும் 5 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வடமராட்சிப் பிரதேசத்தில் திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதுடன் மக்கள் பீதியுடன் பொழுதைக் கழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

# மக்களை வழிப்படுத்த ஆன்மீக நூல்கள் அவசியம்



(வடமராட்சி)

இன்றைய காலகட்டத்தில் மக்களை வழிப்படுத்தும் 'சக்கரம்' போன்ற ஆன்மீகம் சார்ந்த நூல்கள் அவசியம் என வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக உதவிச் செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தெரிவித்துள்ளார்.

பெரியாழ்வார் ஆசிரமத்தினரால் வெளியிடப்படும் கலை கலாசாரம் இலக்கிய ஆன்மீக சித்திப்பு ஏடான 'சக்கரம்' எனும் சஞ்சிகையின் ஆண்டு சிறப்பிதழின் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் ஆசிரம மண்டபத்தில் வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபைத்தலைவர் இ.அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்,

உலகத்தில் எங்கும் இல்லாத ஆலயமாக மூலஸ்தானத்தில் சக்கரத்தை வைத்து வழிபடும் பாரம்பரிய மரபு வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில்தான் உண்டு. இந்நிலையில் அதன் அறப்பணிகளோடு இணைந்துள்ள பெரியாழ்வார் ஆசிரமத்தில் வெளியிடப்படும் சமயம் கலை, கலாசாரம், ஆன்மீகம் போன்றவற்றை உள்ளடக்கிய 'சக்கரம்' எனும் சஞ்சிகை நூலை வெளியிடுவதன் மூலம் சைவ சமய மக்கள் அதனை வாசித்து சைவசமயத்தின் சித்தாந்தத்தையும் ஆன்மீக வழித்தோன்றல்களையும் கற்றுக்கொள்வது இக்காலத்தின் தேவையாகும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சுதர்சனக் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டதுடன், பருத்தித்துறை நகரசபை உபதலைவர் சி.பத்மநாதன், கற்கோவளம் கிராம அலுவலர் தி.கௌதமன் ஆகியோர் சிறப்புப் பிரதியைப் பெற்றுக்கொண்டனர். (116)

# மக்கள் வங்கியால் நடத்தப்பட்ட சிறுவர் தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியால் சிசு உதான, இசுறு உதான வைப்பாளர்களுக்காக சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வருடாந்தம் நடத்தப்படும் சீட்டிழுப்பில் 2011 ஆம் ஆண்டுக்கான வெற்றியாளர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

சங்கானைக் கிளையில் ஆர். டிசாந்தினி 50 ஆயிரம் ரூபாவும், யாழ். பல்கலைக்கழகக் கிளையில் யு.யஸ்வினி 50 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை கிளையில் ரி.மேரிரோமி 50 ஆயிரம் ரூபாவும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசு குறித்த பாடசாலைகளில் எதிர்வரும் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினத்தன்று வழங்கப் படும்.

அத்தோடு 19 வெற்றியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும், 38 வெற்றியாளர்களுக்கு 3 சக்கர சைக்கிள்களும் வழங்கப்படவிருக்கின்றன. இவர்களுக்கான பெயர்ப் பட்டியல் மக்கள் வங்கிக் கிளைகளில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

# பறிபோனது லீசிங் ஆட்டோ

(வரணி)

வடக்கு வரணி கறுக்காய் பகுதியில் கடன் அடிப்படையில் மாதா மாதம் பணம் செலுத்தி வரும் நடைமுறையில் ஆட்டோ பெற்றுக்கொண்டவர் மாதாந்தப் பணம் செலுத்தத் தவறியதால் தனது ஆட்டோவை பறிகொடுத்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி பறிகொடுத்தவர் தகவல் தருகையில்,

மாதா மாதம் உழைத்து அதன்மூலம் சேமித்து பணத்தை செலுத்தமுடியுமென்ற நம்பிக்கையில் வாகனத்தை எடுத்தேன். தொழில் ரீதியில் பின்னடைவு ஏற்பட்டதால் பணத்தை செலுத்த முடியவில்லை எனக் கவலையுடன் தெரிவித்தார். (150)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(வடமராட்சி)

வடமராட்சி இன்பர்சிட்டியில் உள்ள மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளிக்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் சுப்பையா யோகராசா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (116)

# சர்வமதப் பிரார்த்தனையும் மகா சாந்தி யாகமும்

இலங்கை மக்கள் அனைவரது சாந்திக்காகவும் சுபீட்சமான வாழ்விற்காகவும் இலங்கை சத்தியசாயி சேவா நிறுவனம் நடத்தும் சர்வமதப் பிரார்த்தனையும் மகா சாந்தி யாகமும் நாளை தொடக்கம் 3 தினங்களும் காலை 8.00 மணி முதல் பி.ப. 1.00 மணிவரை மானிப்பாய் சோதி வேம்படி வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 8.00 மணிக்கு இடம்பெறும் சர்வமதப் பிரார்த்தனையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். நாக விகாராதிபதி வண. மீகஹய ஐந்துரே சிறி விமலதேரர், யாழ். ஆயர் இல்ல வண. பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள், வட்டுக்கோட்டை ஆயர் இல்ல வண. பிதா எஸ். ஆனல்ட், யாழ். சிவலைப் பள்ளிவாசல் இமாம் அப்துல் அசீம் மௌலவி, யாழ். சிம்மியா மிசன் சுவாமிகள் பிர.ஜாக்கிரத் சைதன்யர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

முதல்நாள் கணபதி ஹோமமும், இரண்டாம் நாள் நவக்கிரக ஹோமமும், மூன்றாம் நாளாகிய வியாழக்கிழமை மகா ம்ருத்யுஞ்ஜெய ஹோமம், லக்ஷ்மி ஹோமம், காயத்திரி ஹோமம், சாயி காயத்திரி ஹோமம், சுமங்கலி பிரார்த்தனை என்பனவும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகள் இணுவில் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்களின் ஆசிகளுடன், மயிலணி சிவஸ்ரீ சோ.ரஜதகிரீசக் குருக்கள் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள சிறப்புமிகு சிவாச்சாரியர்கள் கலந்துகொண்டு நடத்தி வைக்கவுள்ளனர்.

# நஞ்சருந்தி ஆசிரியர் மரணம்


(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொலிகண்டி பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் நேற்று நஞ்சருந்தி மரணமானார்.

மனநலம் பாதிக்கப்பட்ட குணரத்தினம் சரவணேஸ்வரன் (வயது - 41) என்பவரே சனியன்று இரவு நஞ்சருந்தியுள்ளார். மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் மனநிலை பாதிக்கப்பட்டு சிலகாலம் மருத்துவ சிகிச்சை பெற்று தற்போது மருத்துவ ஆலோசனை பெற்ற நிலையிலேயே இவ்வாறு மரணமானதாக மனைவி தெரிவித்தார்.

நேற்று பிரேத பரிசோதனை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி தற்கொலை எனக் கூறி சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (இ)



தீவகக் கல்வி வலயத்தில் 13 ஆண்டுகளாக மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் உழைத்த வலயக் கல்விப் பணிப்பாளர் வசந்தகுலசிங்கம் ராதாகிருஷ்ணனின் மணிவிழா நிகழ்வு வேலணை மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும், யாழ்ப்பாண கல்விச் சமூகத்தினரும் கலந்து சிறப்பித்து விழா நாயகனுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இம்மணிவிழா நிகழ்வானது மிகவும் பிரமாண்டமான முறையில் தீவகக் கல்விவலயக் கல்விச் சமூகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மொழிப் பிரச்சினைக்கு தீர்வுகாண கிராம ரீதியாக சங்கம் அமைய வேண்டும்

## - மாற்றுக் கொள்கை நிறுவனத்தின் இணைப்பாளர் -

(யாழ்ப்பாணம்)

கிராம ரீதியாக ஒரு மொழிச் சங்கம் அமைக்கப்படுமாயின் மக்கள் மொழி ரீதியாக தமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத தீர்வுகாண முடியும் என மாற்றுக்கொள்கை நிலையத்தின் இணைப்பாளர் திகாரி லயனல் குருகே தெரிவித்தார்.

தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற மாற்றுக்கொள்கை நிலையத்தின் சுகவாழ்வுக்கான நிலையமும், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான பணியகமும் இணைந்து நடாத்திய மும்மொழிக் கொள்கை தொடர்பான செயலமர்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் கிழக்கில் நிலவுகின்ற மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு கிராம ரீதியாக மொழிச் சங்கங்களை உருவாக்கி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். 40 வருடங்களுக்கு முன்பே தமிழ் மொழியும், அரச மொழிகளில் ஒன்றாகப் பிரகடனப் படுத்தப்பட்டபோதும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழிப் பயன்பாடு குறைவடைந்துள்ளது.

பொது மக்கள் மத்தியில் வெளியிடப்படுகின்ற தகவல்கள் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலே வெளியிடப்படுகின்றன. இதனால் மொழி புரியாமல் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்படுகின்றது. இப்பிரச்சினை தொடர்பாக மாற்றுக்கொள்கை நிலையத்தினால் பல்வேறு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# திருநெல்வேலி பிரதேசத்தில் சிறுவர் பூங்கா அமைக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பாற்பண்ணைக்கு முன்னால் சிறுவர் பூங்கா ஒன்று நல்லூர் பிரதேச சபையால் அமைக்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர் என நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பி.வசந்தகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பிர தேச சபைக்குச் சொந்தமான ஐந்து பரப்புக் காணியில் சிறுவர்களுக்கான பூங்காவும், விளையாட்டு மைதானமுமாக அமைக்கப்படவுள்ளதாகவும், துரிதமாக சிறுவர் பூங்கா அமைப்பதற்குரிய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதனை விரைவில் திறப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் எனவும் மேலும் குறிப்பிட்டார்.

# மாணவர்களுக்கு புகைப்படப் போட்டி

(வவுனியா)

வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு வரலாறு காணாத நீர்ப் பற்றாக் குறையினை பிரதிலிக்கும் முகமாக சித்திரம் வரைதல் மற்றும் புகைப்படப் போட்டி என்பன நடத்தபபடவுள்ளது.

இதனை அனைத்து பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. மாணவர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும் என அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் வவுனியா மாவட்ட தலைவர் என். கோபிகன் தெரிவித்துள்ளார்.

வறட்சியினால் வவுனியா மாவட்டம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதற்கான தீர்வு அல்லது மாற்று நடவடிக்கைகள் தொடர்பான கருத்துக்களும் எதிர்பார்க்கப்படுகிறது.

"நீர்ப்பற்றாக் குறையும் அதற்கான தீர்வுத் திட்டங்களும்" என்ற தொனிப்பொருளில் ஆக்கங்கள் அமைவதோடு தத்தமது பிரதேசம் சார்ந்ததாகவும் அமைய வேண்டும்.

இப்போட்டி தரம் 1 தொடக்கம் 5 வரை, தரம் 6 தொடக்கம் 11 வரை, தரம் 12 தொடக்கம் 13 வரை, என மூன்று பிரிவுகளாக நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு 071942346 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் ஆக்கங்களை வவுனியா மாவட்ட கல்வித்திணைக்கள கல்வி அபிவிருத்தி வளப்பிரிவுக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (12)

# நெல்சிப் திட்டத்தின் கீழ் வெள்ளவடிகால் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

நகர எழுச்சித் திட்டத்தின் கீழ் (நெல்சிப்) ஆஸ்பத்திரி வீதியில் இருந்து தேவரிக்குளம் வரையான வெள்ள வடிகால் 66 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிககப்பட்டுள்ளன

கடந்த வெள்ளிக்கிழமை இப் பணியினை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், துறை சார்ந்தவர்களுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது மாநகர ஆணையாளர் பிரணவநாதன், மாநகரசபை உத்தியோகத்தர்கள உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தெய்வீகப்பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்.தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் தினமும் மாலை 7.30 மணி முதல் தெய்வீகப் பேருரைகள் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று திங்கட்கிழமை 'கருடபுராணத்தின் அர்த்தம்' என்னும் விடயம் பற்றி சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், நாளை செவ்வாய்க் கிழமை 'பன்முகநோக்கில் இராமன்' என்னும் விடயம் பற்றி யாழ்.உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் எஸ்.செந்தூர்ச்செல்வன், நாளை மறுதினம் புதன் கிழமை 'இதிகாசம் காட்டும் நெறி' என்னும் விடயம் பற்றி நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலர் என்.ஐங்கரன் ஆகியோர் பேருரை வழங்கவுள்ளனர்.

# யாழில் இலவசமாக சிங்களம் கற்கலாம்

(யாழ்ப்பாணம்)

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நிறுவன அபிவிருத்தித்துறைப் பணிப்பாளராகப் பணியாற்றி இளைப்பாறுகைபெற்ற லிலானி அமரசிங்க தற்போது யாழ்ப்பாணத்தில் இலவச சிங்கள வகுப்புக்களை நடாத்தி வருகின்றார். கந்தர்மடம் - பழம்வீதியில் உள்ள பௌத்த - இந்து கலாசார மையத்தில் இந்த வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பேச்சுச் சிங்களத்தை முதன்மைப்படுத்தி நடைபெறும் இவ்வகுப்புக்கள் திங்கள், வெள்ளி, மற்றும் சனி, ஞாயிறு என மாலை வேளையில் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# விழும்! ஆனால் விழாது?




வேலணை - வங்களாவடிச்சந்தியில் நடப்பட்டிருக்கும் மின்சாரக் கம்பங்கள் மிகவும் பழையனவாக இருப்பதால் இப்பகுதியில் மக்கள் பயத்துடன் நடமாடுகின்றனர். இதனை மாற்றி அமைப்பதற்கு, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த மின்சாரத் தூண்கள் 1990 ஆம் ஆண்டுக்கு முன் நடப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (85)

# சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய நூற்றாண்டு விழாவினையொட்டி நடாத்திய சிறுகதைப்போட்டியில் பரிசில் பெறுவோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

முதலாம் இடம் - 5000 ரூபா - 'குருவிச்சை' - தேவி பரமலிங்கம் (தம்பிராசா பரமலிங்கம், வண்ணார் பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம்.)

இரண்டாம் இடம் - 3000 ரூபா - 'வினோத உடைப் போட்டி' - சி.கதிர்காமநாதன், (தொல்புரம் கிழக்கு சுழிபுரம்.)

மூன்றாம் இடம் - 2000 ரூபா - 'விருந்து' - செ.குணரத்தினம், அமிர்தகழி, மட்டக்களப்பு.

ஆறுதல்பரிசு பெறுவோர். - தலா 1000 ரூபா

'சுபதம்' - நடராசா இராமநாதன் (தங்கநிலா அல்வாய் வடக்கு.)

'முற்றுப்புள்ளிகள் முடிவுகளல்ல' திருமதி ஆரபி சிவகுகன் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் மேற்கு கொக்குவில்.)

'பாகுபாடு' - ஆனந்தராணி நாகேந்திரன் (மகாத்மா வீதி, நெல்லியடி.)

'நரம்பறுந்த வீணை' - பொலிகையூர் சு.க.சிந்துதாசன் (ஆலடி, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை.)

'ஒருபிடி மண்ணோடு' கே.ஆர். திருத்துவராசா றோஸ் பவனம் அல்வாய் வடமேற்கு.

'வரம்' - எச்.எப்.ரிஸ்னா (தியத்தலாவ)

'தனிமரம்' மு.இரத்தினம் (கெருடாவில் தெற்கு தொண்டைமானாறு)

மேற்படி பரிசில் பெற்ற பத்துக் கதைகளும் இவ்வருடம் சிறுகதை நூலாக வெளியிடப்படும்.

போட்டி நடுவர்கள் - எழுத்தாளர் தெணியான், எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகன், செல்வி இராஜிதா ரவிரதன் ஆகியோர் செயற்ப்ட்டனர்.

# இறைச்சிக்காக பசுமாட்டை வெட்டியவர்கள் கைது

(வவுனியா)

கனகராயன்குளம் - புளியங்குளம் பகுதியில் முற்பதாயிரம் ரூபா பெறுமதியான பசுமாட்டை இறைச்சிக்காக வெட்டிய இருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வவுனியா - இறைம்பைக்குளத்தைச் சேர்ந்தவர்களே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக மேலும் தெரியவருகிறது. (பா)

இந்த உலகத்தில் வேறு எவருடனும் நீ உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டாம். அவ்வாறு நீ செய்தால் நீ உன்னை அவமதித்துக் கொள்வதாகப் பொருள்.

- அன்னை தெரேசா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## உதைத்தாலும் கூட்டமைப்பே கதி!

கிழக்கு மாகாண சபை தேர்தல் முடிந்த பிறகு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்து பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன. கிழக்கின் வாக்காளர் விகிதாசாரப்படி 15 தமிழர்கள், 13 முஸ்லிம்கள், 7 சிங்களவர்கள் மாகாண சபைக்கு உறுப்பினர்களாக வரவேண்டும். ஆனால் 11 உறுப்பினர்களை மட்டுமே பெறமுடிந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தோல்விக்கு தமிழரசுக் கட்சியினரே காரணம் என சுரேஷ் தரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

கூட்டமைப்பு என்ற பெயரை தமிழரசுக் கட்சியை வளர்ப்பதற்கும், தேர்தலில் வெல்வதற்கும், நிதி சேகரிப்பதற்குமான ஓர் கருவியாகவே தமிழரசுக் கட்சி பயன்படுத்தி வருகின்றமையே இந்தத் தோல்விக்குக் காரணம் என சுரேஷ் பிரேமச்சந்திரனின் சகோதரர் வாரப்பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரையில் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

வேட்பாளர் பட்டியலில் 80 வீதமானவர்களை தன்னிஷ்டப்படி எடுத்துக்கொண்டு அறிவித்துவிட்டு, கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுக்கு 20 வீதமானோரை மட்டுமே ஒதுக்கிய தமிழரசுக் கட்சி, தேர்தல் பிரசாரத்தில் அந்த 20 வீதமானோர் வென்றுவிடக் கூடாது என்பதிலேயே முனைப்பாகச் செயற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 'கிழக்கில் தமிழரசுக் கட்சியை வெல்ல வைப்போம்' என அரியநேத்திரன் பத்திரிகையில் விளம்பரம் கொடுக்குமளவுக்கு தமிழரசுக் கட்சியின் வெற்றிக்கான வெறி அவர்கள் கண்ணை மறைத்திருந்தது என்றும் கூறியுள்ளார்.

வேட்பாளர் பெயர்கள் அறிவிக்கப்பட்டதும் மட்டக்களப்புத் தெருக்களில், கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளின் வேட்பாளர்களைச் சிறுமைப்படுத்தும் சுவரொட்டிகள் தமிழரசுக்கட்சியின் அபிமானிகள் என்ற பெயரில் ஒட்டப்பட்டன. அம்பாறையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் மாவை சேனாதிராசா பேசும் போது, சுரேஷ் நிறுத்திய ஒரு வேட்பாளரை, 'ஈபிடிபி யிலிருந்து வந்திருக்கும் தம்பி... அவர்களே' என நக்கலாக விளித்துப் பேசினார்.

'மக்கள் வாக்களிக்கும்போது கவனமாக இருக்க வேண்டும். இன்னொரு பியசேனாவை உருவாக்கிவிடக் கூடாது' என்று கிண்டலாக, தமிழரசுக் கட்சி தவிர்ந்த கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்பதை வலியுறுத்தியே மேடைகளில் பேசினார்கள்.

இதைவிட உச்சமாக, யாழ்ப்பாணத்திலிருந்து பிரசாரத்திற்குச் சென்ற அணியினர், 'கூட்டமைப்பு என்றால் தமிழரசு, தமிழரசு என்றால் கூட்டமைப்பு' என்றும் மேடைகளில் முத்தாய்ப்பு வைத்தார்கள். இப்படித்தான் தமிழரசுக் கட்சி கூட்டமைப்பையும் சிதைத்து, கிழக்கு மாகாணத்தில் தோல்வியையும் சந்திக்கக் காரணமானது என்று சாடியிருக்கிறார் சுரேஷின் சகோதரர்.

கூட்டமைப்புக்குள் சுரேஷின் கதி மிகப் பரிதாபகரமான நிலைமைக்கு வந்திருப்பதையே இந்த வெதும்பல்கள் காட்டுகின்றன. முன்னர் தைப்பொங்கலுக்கு, தீபாவளிக்குத் தமிழீழம் என்று இயக்கங்கள் சில கூறிவந்ததைப்போல, சுரேசும் கொஞ்சக்காலம் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்வதற்கான இறுதி எச்சரிக்கைகளை தைமாதம், சித்திரை மாதம் ஆவணிமாதம் என்று தமிழரசுக் கட்சிக்கு விடுத்து வந்தார்.

ஒரு கட்டத்தில், தமிழரசுக் கட்சியை விலத்திவிட்டு, ஏனைய கட்சிகளைச் சேர்த்துக் கூட்டமைப்பாகப் பதிவு செய்துவிடுவேன் என்றும் மிரட்டினார் பாவம்! 'பதிவு செய்ய முடியாது, செய்கிறதைச் செய்' என்று தமிழரசுக் கட்சி முகத்துக்கு நேரே சொன்னதும் பெட்டிப் பாம்பாகிப் போனார்.

உள்ளுக்குள் கறுவியபடியே தமிழரசுக் கட்சிக்குக் கீழ்ப்படிவதைத் தவிர, அவருக்கு வேறு வழியில்லை. கோவித்துக்கொண்டு போய் தேர்தலில் நின்றால் பழைய ஆயிரத்திச் சொச்சம் வாக்கும் இப்போது விழுமா என்பது நிச்சயமில்லை. கொடுமைதான்!

- ஆசிரியர்

# ஐ.நா.சபையில் இலங்கைக்கு அபகீர்த்தி;

# அமைச்சர் பீரிஸ் மீது கடும் கண்டனம்

(கொழும்பு)

மனித உரிமைகள் பிரதிநிதிகள் குழு இலங்கை தொடர்பான அறிக்கையை எதிர்வரும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத்தில் சமர்ப்பிக்குமாக இருந்தால், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் பதவி விலக வேண்டும் என்று தேசபற்றுள்ள தேசிய இயக்கம் அறிவித்துள்ளது.

அதன் பிரதான செயலாளர் வசந்த பண்டார கருத்து தெரிவிக்கும் போது, இந்தக் குழு இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தி இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அது இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

இதற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் முறையாக செயற்படாமையே காரணம்.

எனவே அவர் பதவி விலக வேண்டும் என்று வசந்த பண்டார வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்ததாவது, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு, இலங்கை தொடர்பில் உள்ளக அறிக்கை ஒன்றையே தயாரித்துள்ளதாகத் தெரிவித்தது.

# சீரழிகிறது சட்டத்தின் ஆட்சி

## ஐ.தே.கட்சி குமுறல்

மாலக்க சில்வாவினால் இராணுவ மேஜர் ஒருவர் தாக்கப்பட்டதாக கூறப்படும் விவகாரமானது நாட்டின் ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் சீரழிந்துள்ளமைக்கு தெளிவான அறிகுறியாகும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

நபர் ஒருவரை அமைச்சர் மேர்வின் சில்வா மரத்தில் கட்டியமை, துமிந்த சில்வா மற்றும் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர விவகாரம், தற்போது இராணுவ .மேஜர் ஒருவர் மாலக்க சில்வாவினால் தாக்கப்பட்டதாக கூறப்படும் விவகாரம் என்பன, சக்திவாய்ந்த நபர்களுடன் முரண்பட வேண்டாம் என்ற செய்தியையே கூறுகின்றன. அப்படி முரண்பட்டால் சட்டம் உங்களுக்கு எதிராகச் செயற்படும். இவ்வாறான செய்தியைக் கூறும் அளவுக்கு நாடு கீழிறங்கிவிட்டது. ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் சீரழிந்துள்ளன என அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலை குறித்து அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் பலரும் ஏமாற்றமடைந்துள்ளதாக அவர் கூறினார்.

இவ்விடயம் குறித்து நான் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பின்னர், என்னிடம் பேசிய அமைச்சர் ஒருவர் தனது மனதிலும் இவ்வாறான கருத்து உள்ளதாகக் கூறினார்.

அதைப்பகிரங்கமாக ஏன் அவர் பேசவில்லை எனக் கேட்டபோது அவ்வாறு பேசும் நிலையில் தான் இல்லை எனக் கூறினார். இச்சம்பவமானது சட்டமும் ஒழுங்கும் கீழிறங்கியுள்ள நிலையை வெளிப்படுத்துகிறது என அவர் கூறினார்.

# வருமானமே ஒரே குறியானால்

# தெருவில் வாழ்விழப்பது பயணிகளா?

## மக்களின் கேள்விக்கு பதிலளிப்பது யார்?

(புதுக்குடியிருப்பு)

போட்டி ரீதியாக வருமானத்தைக் குறியாகக் கொண்டு வீதிகளில் பயணிக்கும் பேருந்துகள் மற்றும் சிற்றூர்திகள் குறித்து சட்ட நடவடிக்கைகள், கண்டனக்கருத்துக்கள் எதுவும் வெளிப்படுவதில்லையென பொதுமக்கள் மத்தியில் பரவலான ஒரு கருத்து நிலவுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

நாடு அசாதாரண சூழ்நிலையில் இருந்தபோது யாழ். குடாநாட்டின் வீதிகள் பயணத்துக்கு உகந்ததாக இருக்கவில்லை. தற்போது போர் முடிவடைந்த நிலையில், வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு, காபெற் இடப்பட்ட நிலையில் இந்தச் சௌகரியத்தைப் பயன்படுத்திக்கொண்டு பெரும்பாலான வாகனங்கள் வீதிகளில் பயணிக்கும் பொதுமக்களின் உயிர்களையோ மற்றும் உடமைகளையோ கருத்தில் கொள்ளாது போட்டி மனப்பான்மையுடன் செயற்படுவதாக பொது மக்களால் குற்றம் சாட்டப்படுகிறது.

தங்கள் வருமானத்தைக் கருத்திற் கொண்டு காபெற் வீதிகளில் அதிகளவு பயணிகளுடன் அதிவேகமாக போட்டி போட்டு ஓடும் சிற்றூர்திகள் மீது, வீதிகளில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் பொலிஸார் கூட கவனத்தில் கொள்வதில்லையென்றும் பொது மக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நிலவும் சாதாரண சூழ்நிலையில் பல அபிவிருத்தித்திட்டங்களினூடு வீதிப் புனரமைப்புக்கள் நடைபெற்று போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில், இப்படியான அனுகூலங்களை சில வாகன சாரதிகள் தங்கள் சுயநல தேவைகளுக்காக துஷ்பிரயோகம் செய்வதை சில ஊடகங்கள் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்ற போதிலும், இது குறித்து பொது மக்களின் உயிர், உடமைகள் நலன் சார்ந்த தனிநபரோ அன்றி எந்தவொரு அமைப்புக்களோ மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ நடவடிக்கைகளை எடுக்க முன் வருவதில்லை எனவும் பொது மக்கள் மத்தியில் பரவலான கருத்துக்கள நிலவுவதைக் காணமுடிகிறது.

(138)

# நீர் விநியோகம் துரிதம்

(வேலணை)

வேலணைப் பிரதேசத்திற்குட்பட்ட வேலணை, துறையூர், கண்ணபுரம் பகுதிகள் அடங்கிய கிராமங்களுக்கு நீர்த்தாங்கிகள் மூலம குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா கிராமிய மக்கள் ஒன்றியத்தின் வேலணைப் பிரதேச கிளையின் உறுப்பினர்களால் வேலணையில் உள்ள மேற்படி கிராமங்களில் தண்ணீர் இல்லாமல் வறட்சியான பகுதிகளுக்கு நீர்த்தாங்கிகள் மூலம் தண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தண்ணீர் வழங்கலினூடாக வறட்சியுற்ற பகுதிகளில் இருக்கும் மக்கள் பயன் அடைவதாகவும் இந்நீர் விநியோகம் வாரத்தில் இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(85)

# விபத்துக்களுக்கு காரணம் என்ன?

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறுகின்ற வாகன விபத்துக்களில் 90 சதவீதமானவை, சாரதிகளின் கவன யீனத்தால் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் றொசான் குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். தமது ஆணைக்குழு மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மதுபோதை, தொலைபேசியைப் பயன்படுத்தியபடி வாகனம் செலுத்துதல் போன்ற பல்வேறு காரணங்களால் வாகன சாரதிகளின் கவனம் திசை திருப்பப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தலைவர்கள் தங்களுடைய தகுதிபற்றி சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டும்

## தேவன் கட்டுரையிலிருந்து

புலம்பெயர் தமிழர்களின் செயற்பாட்டை அவதானித்த ஒரு வெள்ளை இனத்தவர் David Prater J.D (The University of Maryland School of Law) என்பவர் அண்மையில் எழுதிய The Transitional Justice Function of Multicultural Policies in Sri Lanka எனும் கட்டுரையில் அர்த்தமுள்ள ஆழமான பல விடயங்களை பதிவு செய்துள்ளார்.

அதாவது புலம்பெயர் புலி ஆதரவு தமிழர்கள் கடந்த மூன்று தசாப்தத்திற்கு மேலாக அர்த்தமற்ற போருக்கும் சாத்தியமற்ற ஈழம் எனும் இலக்குக்கும், அழிவுக்கும் பல பில்லியன்களை பங்களிப்பு செய்தது போல, போர் முடிவின் பின்னரான காலத்தில் இலங்கைத் தீவில் ஜனநாயக துஷ்பிரயோகமற்ற, இனவாத மற்ற, சமூக நீதியைப் பேணக் கூடிய தான, ஐக்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்துவதற்கும், தமிழ் சமூகத்தை பன்முகப்படுத்துவதற்கும் புலம்பெயர்வாழ்வு அனுபவங்களை பங்களிப்பு செய்வதுடன், கடந்தகாலத் தவறுகளுக்கு பிராயச்சித்தம் தேடுவதுடன், போருக்கு பின்பான தேசத்தையும், தமிழ் சமூகத்தையும் கட்டி எழுப்புவதற்கு தார்மீகரீதியாக முன்வர வேண்டுமென அழைப்பு விடுக்கிறார்.

ஆனால் யதார்த்தம் என்னவோ யுத்தம் முடிந்து 3 வருடம்ஆகியும் நல்லாட்சி, ஜனநாயகம், சமூக நீதி, பன்மைத்துவம், இனங்களுக்கிடையிலான சமத்துவம், நிரந்தர அமைதி, அரசியல் தீர்வு போன்ற உன்னத விடயங்கள் வெகு தொலைவில் கலங்கரை விளக்கு போல் தெரிகிறது.

இதற்கான காரணம், தேசத்தை ஆட்சி செய்த சிங்களத் தலைவர்களும் சரி, தமிழ் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த தமிழ் தலைவர்களும் சரி,சிங்கள-தமிழ் சமூகத்தினரை இலங்கையர் எனும் ஒரு குடையின் கீழ் பன்முகத் தளத்தில் வழி நடத்துவதற்குப் பதிலாக, தமது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவும், இருப்பை உறுதி செய்வதற்காகவும் இனத்துவ அடையாளங்களையே மூலதனமாக இனவாதத் தளத்தில் பாவித்து வந்துள்ளார்கள்.

தமிழ் சமூகத்தின் பின்னடைவுக்கும், தோல்விக்கும், தொடர்ச்சியான அழிவுக்கும் தமிழர்களை இனவாத, போலி தேசியவாத தவறான பாதையில் வழி நடாத்திய தமிழரசுக்கட்சியிலிருந்து .தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரையிலான தலைமைகளே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ் சமூகத்தின் 60 வருடங்களுக்கு மேலான பின்னடைவுக்கு பின்பு கூட, த.தே.கூ. முரண்பாடான அரசியலையே நடத்தி வருகிறது. இதற்கு அண்மைய உதாரணங்களாக சம்பந்தர் தேசியக் கொடியை ஏற்றுகிறார். பின்பு தமிழரசுக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டில் பிரிவினைக் கருத்தை விதைக்கிறார். அதே கட்சியில் இருக்கும் விநாயகமூர்த்தி என்பவர் தேசியக் கொடி ஏற்றியதை மறுக்கிறார். உள்நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் மகிந்தவின் கொடும்பாவி, தேசியக் கொடி, அரசியல் யாப்பு போன்றவைகள் எரிக்கப்படுகின்றன. இவைகளை TNA கண்டிப்பதுமில்லை. கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுமில்லை இவைகள் தவிர தமிழ்நாட்டிலும் தி.மு.க., அ.தி.மு.க., பல சிறிய கட்சிகள் என்பன இலங்கைக்கு எதிராகவும், தமிழர் வாழ்வோடு விளையாடும்வகையிலும், தமது இருப்புக்காக போட்டியாக அரசியல் செய்து வருவதை TNA மௌனமாக அங்கீகரிக்கிறது.

இவ்வாறான இனவாத, பிற்போக்குவாத அரசியல் போக்குகள் எந்தவகையிலும் யுத்தத்துக்கு பின்னரான தேசத்தை கட்டி எழுப்புவதற்கும்,இனங்களுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நிரந்தர அமைதி, அரசியல் தீர்வு எட்டுவதற்கும் தடையாக இருக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.


இலங்கைத் தமிழருக்கு தேசிய ஒடுக்குமுறை இருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால் அந்த ஒடுக்குமுறையை தீர்ப்பதற்கு தேர்வு செய்த அழிவுப்பாதைகளான 'தமிழ் ஈழம்', அதை அடைவதற்காக வன்முறைக் கலாசாரம், கொலைகள், மனிதஉரிமை மீறல்கள், சிறுவர்களை பலாத்காரமாக போரில் இணைத்தல், மாற்றுச் சிந்தனை, மாற்றுக் கோட்பாடு வெளிப்படுத்திய தலைவர்களைக் கொன்று ஒழித்தது, நம்மவர்களுக்கு சொல்லொணா துயரங்களை ஏற்படுத்தியது என பல இரத்தக்கறை படிந்த சம்பவங்களை விமர்சித்துக் கொண்டே போகலாம்.

இதில் உள்ள தார்மீகரீதியான கேள்வி என்னவென்றால், சிங்கள தேசியவாத ஒடுக்குமுறைக்கு தீர்வாக இரத்தமும் சதையும் பிணமுமாக் ஆயுதக் கலாசாரத்தை தேசத்தின் மீது கட்டவிழ்த்துவிட்டு, தேசமே கடந்த 30 வருடமாக எரியும்போது தமிழ் சமூகத்தின் பெரும்பான்மையான தமிழ் தேசியவாத ஊடகங்கள், ஆன்மீக நிறுவனங்கள், தேசியவாத கவிஞர்கள், இலக்கியவாதிகள், வியாபார நிறுவனங்கள் தேசியவாத பாசிச ரத்தம் தோய்ந்த அவதூறுக் கலாசாரத்தின் மீது யாரும் தார்மீக ரீதியாக (Moral) கேள்வியோ, விமர்சனமோ, எதிர்ப்போ வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

கடந்த 30 வருட இருள் சூழ்ந்த வரலாற்றில் ஒரு சில குறிப்பிட்ட நல்ல முற்போக்கான மனித நேயம் உள்ள மனிதர்கள் தர்மத்தின் மீதும், தார்மீகத்தின் மீதும் நம்பிக்கை உள்ளவர்கள், பாசிசத்தை நோக்கி கேள்வி, விமர்சனம் செய்தவர்களுக்கெல்லாம் துரோகிப் பட்டமும், அவர்களின் வாழ்வின் சுவடே இல்லாமல் அழிக்கப்பட்டது. ஒருசிலர்தான் அபூர்வமாகத் தப்பி உயிர் வாழ்கிறார்கள்.

மொத்தமாக 60 வருடத்துக்கு மேற்பட்ட தேசிய இன முரண்பாட்டு வரலாற்றில் அகிம்சைப் போராட்டத்திலும் சரி, ஆயுதப் போராட்டத்திலும் சரி, குறைந்தபட்சம் சத்தியம், நேர்மை, தார்மீகம் வெளிப்படுத்தப்படவில்லை.

தார்மீக அறநெறிகளுக்குப் பதிலாக இனவாதம், தேச விசுவாசமின்மை, தேசப்பற்றற்ற துரோகம், இரத்தத்தை உறைய வைக்கும் கொலைகள், வன்முறைக் கலாசாரம், அரசியல் அதிகாரங்களை, இருப்புக்களை, நாடாளுமன்ற சுக போகங்களை அனுபவிப்பதற்காக இன அடையாளங்களை தேர்தல் காலத்தில் பரப்புரை செய்தல், தேசிய வாழ்விலும், தேசிய நீரோட்டத்தில் இருந்தும் தமிழ் சமூகத்தை தனிமைப்படுத்தல், அவலங்களை உருவாக்குதல், அவலங்களை செழுமையான வாழ்வுக்காக பயன்படுத்தல் போன்றவைதான் தமிழரின் அரசியல் வரலாறாக இருக்கிறது.



**உலக வரலாற்றிலேயே பாராளுமன்ற பதவி-களை எந்தத் திட்டங்கள் இல்லாமலும், என்ன செய்தோம் என்று மக்களிடம் கூறாமலும், மக்கள் வரிப்பணத்தில் ஏப்பம் விட்டும், தேசத்துக்கு விசுவாசம் இல்லாமலும், எதிராகவும், சத்தியப் பிரமாணத்தை அரசியல் யாப்பை மீறும் வகையிலும் துரோகத்தனமான, சுயலாப, தேசத்துரோக, இனவாத அரசியல் செய்து வரும் அரசியல் தலைமைகள் தமிழ் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவையாகத்தான் இருக்க முடியும்.**

மிதவாத, இனவாத, பிற்போக்குவாத தமிழரின் அரசியல் தலைமையான தமிழ் காங்கிரஸில் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு வரை, தமிழ் மக்களை கடந்த கா'ல் நூற்றாண்டுக்கு மேலாக இரத்த ஆற்றில் மிதக்கவிட்டதுதான் அரை நூற்றாண்டுக்கு மேலான அரசியல் தலைமைத்துவ சாதனையாக இருக்கிறது.

தமிழ்ச் சமூகத்தின் தேசிய ஒடுக்குமுறைக்கு 'தீர்வு' - அதிகாரப் பகிர்வு தேவை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால் தீர்வைப் பற்றி சிந்திப்பதற்கு முன்னால் தமிழ் தரப்பில் பல மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் முன்னெடுக்க வேண்டும்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு என்று வரும்போது, தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ்கட்சிகள் 'சோறா சுதந்திரமா?', 'தமிழ் ஈழத்துக்கு குறைவான எந்தத் தீர்வையும் ஏற்கமாட்டோம்','இலங்கை அரசியல் யாப்புக்கு கீழ் பேச்சுவார்த்தை நடாத்தமாட்டோம்', 'அபிவிருத்தி தேவையில்லை உரிமையே வேணும்' என்று கூறி வந்த தமிழ்த் தலைமைகள், இறுதியாக 'கிழக்கு மாகாணசபை தேர்தலானது கடவுளால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட இறுதி சந்தர்ப்பம்' எனவும், 'அனைத்து கிழக்கு தமிழ் மக்களும் TNA க்கு வாக்களித்து எங்களை நாங்களே ஆள வேண்டும்' என்றும், மக்கள் தம்முடைய பக்கம் இருப்பதாகவும், உலகம் TNA க்கு பின்னால் நிற்பதாகவும், வரலாறு படைக்கும் படியும் மேடைக்கு மேடை முழங்கினார்கள்.

உலக வரலாற்றிலேயே நாடாளுமன்ற பதவிகளை எந்தத் திட்டங்கள் இல்லாமலும், என்ன செய்தோம் என்று மக்களிடம் கூறாமலும், மக்கள் வரிப்பணத்தில் ஏப்பம் விட்டும், தேசத்துக்கு விசுவாசம் இல்லாமலும், எதிராகவும், சத்தியப் பிரமாணத்தை அரசியல் யாப்பை மீறும் வகையிலும் துரோகத்தனமான, சுயலாப, தேசத்துரோக, இனவாத அரசியல்செய்து வரும் அரசியல் தலைமைகள் தமிழ் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவையாகத்தான் இருக்க முடியும்.

குறிப்பாகச் சொல்லப்போனால், தமிழரின் தேசிய இனப்பிரச்சினை வரலாற்றில் யாழ்ப்பாண மேட்டுக்குடி அப்புக்காத்து பாரம்பரியத்தாலும், அவர்களால் பால் ஊட்டி வளர்க்கப்பட்ட பாசிச பாரம்பரியத்தாலும் முழுத் தமிழ் சமூகமும் கோமா நிலையையே அடைந்தது.

முள்ளிவாய்க்கால் வரை தமிழ் மக்களை பெரும் மானிடத் துயருக்கும், கோமா நிலைக்கும் அழைத்துச் சென்ற சம்பந்தன் தலைமையிலான TNA கட்சியினர், இறுதி யுத்தம் நடக்கும் போது தேசத்தை விட்டு தப்பியோடி இந்தியாவிலும், ஐரோப்பாவிலும் தஞ்சம் புகுந்ததுடன், தேசத்துக்கு எதிராகவும், புலிகளுக்கு ஆதரவாகவும் பிரசாரப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் நடக்கும் போதும், அதற்கு முன்பும் பின்பும் போரால் அவதிப்பட்ட மக்களை விட்டுவிட்டு ஓடாமல் புலிகளால் இலக்கு வைத்து உயிர் தப்பிய டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமிழ் மக்களுக்கு அமைதியான முறையில், ஆர்ப்பாட்டம், பரபரப்பு இல்லாமல் விபரிக்க முடியாத பல சேவைகளை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

பைபிள் கூறுகிறது, 'பாவம் செய்தவர்களுக்கு மரணம் தான் முடிவு' என. ஆனால் பாவம் செய்ய தூண்டினவர்கள் இன்னும் தமிழ் மக்களுக்கு பல பாவங்களை செய்தபடி வாழ்ந்து வருகிறார்கள்.

அத்துடன் தமிழர்கள் தாங்களே ஆள வேண்டும் என்றும், தங்களிடம் வட - கிழக்கு அதிகாரங்களை கொடுக்கும்படியும் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறார்கள். உண்மையிலேயே போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது செய்ய நினைத்தால், அதற்கு ஆட்சி அதிகாரம் தேவையில்லை. இறுதி ஈழப் போருக்காக சேகரித்த பல மில்லியன் டொலர் பணம் புலம்பெயர் புலி பினாமிகளிடம் புதைந்து போயுள்ளது. அந்தப் பணத்தை வன்னி மக்களின் தேவைகளுக்கு கொடுத்து உதவும்படி யாரும் கேட்பதில்லை.

கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைக்கும் முகமாக ஐ.தே. கட்சியிடமும், முஸ்லிம் காங்கிரஸிடமும் ஆதரவு வேண்டி நிற்கிறார்கள். என்னே ஒரு தார்மீகம், என்னே ஒரு சமூக அக்கறை.

(17ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்கள் சுயகௌரவம் சிதைக்கப்படக் கூடாது

(டில்லி)

இலங்கையில் வாழும் தமிழர்கள் மரியாதையுடன் நடத்தப்படவேண்டும். இதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தவுள்ளதாக இந்திய மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

சாஞ்சியில் புத்த மற்றும் இந்துமத ஆய்வுப் பல்கலைக் கழகத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அடிக்கல் நாட்டியதைத் தொடர்ந்து அம்மாநில முதலமைச்சர் சிவராஜ்சிங் சவு கான், ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தை குறித்து செய்தியாளர்களிடம் முதலமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் கூறியதாவது,

ஒவ்வொரு அரசுக்கும் தனது மக்களின் கலாசாரத்தைப் பேணிக்காத்து அவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டுமென்பது முக்கியமான கடமை.

உள்நாட்டு யுத்தத்தால் இடம் பெயர்ந்துள்ள மக்களை தங்கள் இடங்களில் மீண்டும் குடியமர்த்துவது ஒரு மாநிலத்தின் பிரச்சினையாக இருக்கவில்லை. அது ஒரு நாட்டின் பிரச்சினை.

குறைந்த எண்ணிக்கையில் உள்ள தமிழர்கள் அங்கு மரியாதையுடன் நடத்தப்பட வேண்டுமென நான் இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன்.

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் தங்களின் கலாசார சிந்தனைகளை பரிமாறிக் கொள்கிறார்கள். இப்பிரச்சினை விரைவில் சுமுகமாக முடியும் என்று நான் நம்புகிறேன். இரு நாடுகளிடையே உள்ள கலாசார உறவுகள் வலுப்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சந்திப்பின்போது போபாலுக்கும் கொழும்பிற்கும் இடையில் வாராந்தம் 3 விமான சேவைகளை நடத்த ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இணைந்து பணியாற்ற வாருங்கள்

# புதிய முதலமைச்சர் கூட்டமைப்புக்கு அழைப்பு

(கிண்ணியா)

கிழக்கு மாகாணத்தில் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து கூட்டாக ஆட்சி செய்ய விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள கிழககு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீட், நிர்வாகத்தில் பங்கெடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சிகளுடன் கூட்டாக இணைந்து ஆட்சி நடாத்துவதன் மூலம் பிரதேசத்தின் அபிவிருத்தியை மேம்படுத்த முடியும்.

கட்சி, நிற பேதங்களை களைந்து ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் வெற்றிகரமான பயணமொன்றை முன்னெடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இவ்வாறான ஓர் அழைப்பு எதுவும் தமக்கு இதுவரையில் கிடைக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

# பிள்ளையானுக்கு திருமணம்

(மட்டக்களப்பு)



கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்ற சிவநேசத்துரை சந்திரகாந்தன், இந்த வருட இறுதியில் திருமணம் செய்து கொள்ளவுள்ளார்.

தற்போது இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள பிள்ளையான், சில காலங்களுக்கு முன்னர் நிச்சயதார்த்தம் செய்யப்பட்ட பெண்ணை மணம் முடிக்கவுள்ளார்.

இதன் பின்னர் அவர் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமத்திய மாகாண சபையில் முதலமைச்சர் பதவி யாருக்கு?

## முற்றுப் பெறாத இழுபறி நிலை

(கொழும்பு)



வடமத்திய மாகாணசபையின் முதலமைச்சர் பதவி வேறு யாருக்கும் வழங்கப்பட்டால் நீதிமன்றின் உதவியை நாட நேரிடம் என முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சட்ட விரோதமான முறையில் முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டால் அதற்கு எதிராக வழக்குத் தொடரப்படும். ஆளும் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற நபரே முதலமச்சராக நியமிக்கப்படல் வேண்டும்.

அரசியல் சாசன அடிப்படையில் இவ்வாறே முதலமைச்சர் தெரிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் பெரும்பான்மை ஆதரவுடைய ஒருவரே முதலமைச்சராக நியமிக்கப்பட முடியும.

அதி கூடிய விருப்பு வாக்குகளோ அல்லது வேறு காரணிகளையோ கருத்திற் கொண்டு முதலமைச்சரைத் தெரிவு செய்ய முடியாது என பேர்டி பிரேமலால் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆளும் கட்சியைச் சேர்ந்த 21 உறுப்பினர்களில் 11 பேர் பேர்டி பிரேமலாலுக்கு ஆதரவளிப்பதாக சத்தியக்கடதாசி மூலம் அறிவித்துள்ளனர்.

பேர்டி பிரேமலால் முதலமைச்சராக நியமிக்கப்படாவிட்டால் மாகாணசபையின் தலைவர் மற்றும் பிரதித் தலைவர் பதவிகள் எதிர்க்கட்சிக்குச் செல்லக்கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கில் அரசுடன் கூட்டு; மு.கா. கட்சிக்குள் சலசலப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஆளும் கட்சிக்கு ஆதரவளிப்பதென கட்சித் தலைமை எடுத்த தீர்மானம் இந்த சர்ச்சைகளுக்கான பிரதான காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியுடன் இணைந்து கொள்ள எடுத்த தீர்மானத்திற்கு பலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆளும் கட்சிக்கு ஆதரவளிப்பது என்ற கட்சித் தலைமையின் தீர்மானம் எதேச்சாதிகார போக்கில் எடுக்கப்பட்டதாகவும், வெளிப்படைத்தன்மையுடன் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும், அதி உயர் பீடத்தின் பூரண சம்மதம் இந்தத் தீர்மானத்திற்கு கிடைக்கவில்லை எனவும் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோரிக்கைகள் எதனையும் வென்றெடுக்காது கட்சித் தலைமை ஆளும் கட்சியில் இணைந்து கொண்டதாகக் குறிப்பிடடுள்ளார்.

எனினும் இது குறித்து முஸ்லிம காங்கிரஸோ அல்லது கட்சியின் தலைமையோ இதுவரை உத்தி யோகபூர்வமாக எதனையும் தெரிவிக்கவில்லை.

# 41 விசேட அதிரடிப்படை வீரர்கள் தற்காலிக பணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 41 பேர் தற்காலிகமாகப் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். அம்பாறை பிரதேசத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பங்குபற்றாத விசேட அதிரடிப்படை வீரர்களே தற்காலிகமாக சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

விசேட அதிரடிப்படைப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் இந்த வீரர்கள் கலந்துகொள்ளாமை குறித்து ஒழுங்காற்று விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விடயம் குறித்து ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிய கட்சி அமைப்பதில் சரத் பொன்சேகா தீவிரம்

(கொழும்பு)



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா புதிய அரசியல் கட்சியொன்றை பதிவு செய்ய ஆயத்தமாகி வருகின்றார்.

எதிர்வரும் சில வாரங்களில் இந்தப் புதியகட்சிக்குரிய பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி உள்ளிட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்தப் புதிய கட்சிக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதனை பிரதான இலக்காகக் கொண்டு இந்தக் கட்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆளும் கட்சியின் நடவடிக்கைகளினால் அதிருப்தி அடைந்த சில ஆளும் கட்சி உறுப்பினர்களும் இந்தப் புதிய கட்சியில் இணைந்து கொள்வார்கள் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜே.வி.பி மற்றும் ஐ.தே.க முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் புதிய கட்சியுடன் இணைந்து கொள்ளப்போவதில்லை என ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பொதுவான எதிர்க்கட்சியொன்றை உருவாக்கும் முனைப்பில் ஈடுபட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தேவையென்றால் சரத் பொன்சேகா பொதுவான எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ள முடியும். எனினும், சரத் பொன்சேகாவின் புதிய கட்சியுடன் இணைந்து கொள்ளப் போவதில்லை என அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# துமிந்தவின் எம்.பி. பதவிக்கு ஆப்பு; ஹிருணிகா தூக்குகிறார் போர்க்கொடி

(கொழும்பு)

துமிந்த சில்வா தொடர்ந்தும் எவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியும் என்று தாம் கேள்வி எழுப்பவுள்ளதாக கொலை செய்யப்பட்ட பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மகளான ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வாவை சந்தித்து இது தொடர்பில் கேள்வி எழுப்பப்போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் டி.எம்.ஜயரத்ன மற்றும் துமிந்த சில்வா ஆகியோருக்கு மூன்று மாதகால விடுமுறையை கடந்த வாரம் இலங்கையின் நாடாளுமன்றம் அனுமதித்தது.


இந்தநிலையில், தமது நினைவாற்றலை இழந்துள்ளதாக கூறப்படும் துமிந்த சில்வாவை எவ்வாறு தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட வைக்க முடியும் என்று ஹிருணிகா கேட்கவுள்ளார்.

இதேவேளை, தமது தந்தையாரின் கொலைக்கு நியாயம் கிடைக்கும் வரை தாம் தொடரந்தும் போராடப் போவதாகவும், கொலை விசாரணை முடியும் வரை தாம் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என்றும் ஹிருணிகா குறிப்பிட்டுள்ளார்.



அண்மையில் ஆளும் கட்சிக் கூட்டங்களில் தோன்றியமை தொடர்பில் தம்மீது குற்றம் சுமத்தப்பட்டமையை சுட்டிக்காட்டியுள்ள ஹிருணிகா, அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தமது தந்தையாரின் நண்பர் என்ற அடிப்படையில் அவருக்கு ஆதரவளிக்கும் முகமாகவே ஆளும் கட்சிக்கூட்டத்தில் தோன்றியதாக குறிப்பிட்டுள்ளார்.

# கரம்பகம், எழுதுமட்டுவாழ் பகுதியில் இந்திய வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவு



(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதியுதவியுடன் வடமாகாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 50 ஆயிரம் வீடமைப்புத் திட்டத்தின் முதற்கட்ட பயனாளிகள் தெரிவு தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கரம்பகம், எழுதுமட்டுவாள் தெற்கு கிராமங்களில் நடைபெற்றன.


கரம்பகம் (ஜே/330) கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பயனாளிகள் தெரிவுக் கூட்டம் கரம்பகம் அ.த.க.பாடசாலையிலும், எழுதுமட்டுவாள் தெற்கு (ஜே/333) கிராமஅலுவலர் பிரிவிற்குட்பட்ட பயனாளிகள் தெரிவுக் கூட்டம் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்திலும் நடைபெற்றன.

இப்பயனாளிகள் தெரிவின் போது பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், அதிக சிறுவர்களைக் கொண்ட குடும்பங்கள், மீள்குடியேற்றத்தின் தன்மை, மாதவருமானம், தங்கி வாழ்வோரின் எண்ணிக்கை, என்பவற்றின் அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) இப்பிரதேசத்திலுள்ள அனைவரும் யுத்தத்தின் காரணத்தால் அனைத்தையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். அவ்வாறே அனைவரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதனால் பாரபட்சமற்ற முறையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் அஞ்சலிதேவி, சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளருமான சூசைமுத்து அலெக்ஸ்சான்டர் (சாள்ஸ்) பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரகுநாதன், கிராமஅலுவலர்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், பயனாளிகள் எனப பலரும் கலந்து கொண்டனர்.

# பரமர் சங்கமம்



பாம்பு கேட்டது "கருடா சௌக்கியமா?" கருடன் சொன்னது. இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே!"

நாமறிந்த அளவில் நிலப்பிரபுத்துவம், மன்னராட்சி, மக்களாட்சி என்னும் ஜனநாயகம் கோலோச்சும் காலமிது. புதிய நாகரிகமான விஞ்ஞான சோசலிசம் இன்னும் ஐம்பதோ, நூறாண்டுகளில் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கப்படுகிறது.

ஜனநாயம் என்னும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்களே ஆள்கின்ற ஆட்சிக்காலங்களில் அந்த அலகை மீறி நிலப்பிரபுத்துவ, மன்னராட்சி மாரிதியான வடிவங்கள் அவ்வவ்போது அரசங்க நிர்வாக அலகுகளிடையே தலை காட்டிக்கொள்வதையும் அனுபவித்துக் கொண்டுள்ளோம்.

பழமையின் எச்சங்கள் இலகுவில் எம்மை விட்டு நீங்கி விடுவதில்லை. என்பதற்கு உதாரணமாக அதனைக் கொள்ளலாம். சமீபத்தில் முடிவடைந்த கிழக்கு, வட மத்திய, சப்ரகம மாகாணத் தேர்தல் முடிவுகள் கிழக்கு மாகாணத்தில் ஆட்சியை அமைப்பதில் இழுபறி நிலையைத் தோற்றுவித்து இருந்தது.

அவ்வேளை பேரம் பேசப்பட்ட சமயம் ஐக்கிய தேசியக் கட்சி நான்கு உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்தால் தமிழீழத்தை உருவாக்க உதவுவதாக அரச தரப்பினரால் பழி சுமத்தப்பட்டது.

அதேவேளை அரசு சார்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கிழக்கு மாகாண ஆட்சியில் பங்கெடுக்க தமிழ்த தேசிய கூட்டமைப்புக்கும் அமைப்பு விட்டிருந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி நான்கு உறுப்பினர்களும் கிழக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்க உதவினால் அது தமிழீழம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இணைந்து ஆட்சி அமைத்தால் அது ஸ்ரீலங்காவா?

இந்தத் திரிபுவாத சிந்தனைப்பொறி தட்டியதும் புலிகளுக்கும், அரசுக்கும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தென் இலங்கை இடதுசாரி அரசியல் வாதி ஒருவர் கூறிய கீழ்க்கண்ட வார்தைகள் ஞாபகம் வந்தன.

"நிலத்தில் இருந்து குண்டுத் தாக்குதல் நடத்தினால் பயங்கரவாதம்: வானில் இருந்து குண்டு போட்டால் தேசிய வாதம்" இது தான் அவர் சொன்னது.

தனக்குத் தனக்கெண்டால் சுளகு படக்கு படக்கெண்ணும்; என்பது போல சந்தர்ப்ப வாதம் திரிபுவாதம் ஜனநாயக அரசியல் பாதையில் மிகுச் சாதாரணமாகவே நீச்சல் அடிக்கும்.

எதற்கும் முடிவுகள் ஏற்பட்டு விடுவதில்லை மாற்றங்களே நிகழும் என்னும் மார்க்ஸ் சிந்தனைக்கு ஒப்ப ஏற்கனவே இருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முன்பாக வேறொரு பிரச்சினை தலை தூக்கி ஆட்சிக் காலத்தை விழுங்கிக் கொண்டிருப்பதுதான் ஜனநாயகமாக மாறிவிட்டது.

"இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே" எண்டது போல ஆனைக்கு ஒரு காலமெண்டால் பூனைக்கும் ஒருகாலம்; இருக்கிறது தானே இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# பரிபாலனசபை தெரிவு

(மண்டைதீவு)

மண்டைதீவு கிழக்கு வேப்பந்திடல் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பொதுக்கூட்டத்தில் புதிய ஆலய பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் பொதுக் கோவிலாக்கப்பட்ட இந்த ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில தலைவராக அ.சிறிபத்மராசா, செயலாளராக ம.சசிகாந் மற்றும் பொருளாளராக தி.யோகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகசபையின் ஏனைய உறுப்பினர்களும் கணக்காய்வாளர் மற்றும் மரபு வழி முன்னைநாள் உரிமையாளர் கனகசபை சிவராசா ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (23)

# மணவாளக்கோலம்

(வரணி)

வடக்கு வரணி ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான மணவாளக்கோலவிழா நாளைமறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் வள்ளி திருமணம் என்னும் தலைப்பில் வில்லிசை கச்சேரி மற்றும் இசைக்கச்சேரியும் நடைபெறுமென ஆலய நிர்வாகசபையினர் தெரிவித்துள்ளனர். (150)

# திருநெல்வேலி, மானிப்பாய் பகுதிகளில் 2 சிறுவர் வன்புணர்வு சம்பவங்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)

கடந்தவாரம் திருநெல்வேலி மற்றும் மானிப்பாய்ப் பகுதிகளில் இரண்டு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற ஒரு சம்பவத்தில்14 வயதுடைய சிறுமி ஒருவரை 23 வயது இளைஞர் மரவள்ளித்தோட்டத்திற்கு அழைத்துச் சென்று அங்கு வைத்து பாலியல் துஷ்பிரயோகம் புரிந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் இளைஞர் கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டிருக்கிறார். வைத்திய பரிசோதனையின் நிமித்தம் சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இதே வேளை மானிப்பாயில் சாவல்காட்டுப்பகுதியில் நடைபெற்ற மற்றைய சம்பவத்தில் 15 வயது சிறுமி ஒருவரை 17 வயது வாலிபன் கடத்திச் சென்றதாக கடந்த 14 ஆம் திகதி மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் சிறுமி சிறுவர் நன்னடத்தைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் மானிப்பாய் பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார் எனவும் தெரியவருகிறது.

(பா)

# முரசின் இன்றைய பலன்

(24.09.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 08 ஆம் திகதி.
நட்சத்திரம் பூராடம். சித்தயோகம். பிற்பகல் 3.59 வரை.
திதி நவமி பின்னிரவு 1.29 வரை.
இராகுகாலம் 7.32 - 9.02 வரை. சுபநேரம் 12.02 - 1.32 வரை.
எமகண்டம் 10.32 - 12.02 வரை, குளிகன் காலம் 1.32 - 3.02 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம்  | எண்ணத்திலும், செயலிலும் நிதானம். தொழில் வளர வாய்ப்பு. தவிர்க்க இயலாத செலவு. பொறுமைக்குப் பலன். குடும்ப அரவணைப்பு. பிள்ளைகளால் மகிழ்ச்சி. |
| ரிஷபம்  | அதிக வேலைப்பளு. நண்பர், இல்லறத்துணை ஆதரவு. உழைப்புக்கு புதிய உத்வேகம். வரவை விட அதிக செலவு. வெளியூர் பிரயாண்ம். எதிர்பாராத உதவி. |
| மிதுனம்  | சிறு சிரமங்கள் இருக்கும். கவலை வேண்டாம். தொழிலில் ஈடுபாடு. பணவரவில் தாமதம். பணியிடத்தில் நன்மதிப்பு. சீரான ஒய்வு உடல் நலம் காக்கும். |
| கடகம்  | தகுதிக்கு மீறிய செயல்கள் வேண்டாம். கவனம் தேவை. தொழிலில் குறுக்கீடு உருவாகும். செலவினம் மனதை சஞ்சலப் படுத்தும். உறவினரால் உதவி. |
| சிம்மம்  | செயல்களில் தடுமாற்றம். மறதி இருக்கும். ஆலோசனை உதவி தேவை. கடன் அடைப்பீர்கள். உறவினர் வருகை, குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| கன்னி  | அன்பும் கருணையும் மிகும். தாய்வழி உறவினருக்கு உதவி. தொழிலில் இருந்த தடை நீங்கும். எதிர்மறையாக நடந்தவர் வருந்துவர். |
| துலாம்  | முன்னேற்பாட்டு முயற்சிகள். தொழில் வளர்ச்சி. விட்டுக கொடுக்கும் மனப்பாங்கு. தாராள பணவரவு. நன்மைகள் வந்து சேரும். தம்பதியர் அன்யோன்யம். |
| விருச்சிகம்  | மனதில் நம்பிக்கை. பணியில் திறமை. தொழிலில் அபரிமித வளர்ச்சி. சேமிக்கும் வகையில் பணவரவு. உறவினர் குடும்ப மங்கல நிகழ்வு. பிரிந்தவர் கூடுவர். |
| தனுசு  | உதவிகள், அறப்பணி புரிவீர்கள். சார்ந்தோர்க்கு உதவ தேவையான பணவசதி வரும். தொழிலில் அதிக நேரம். புதிய பொருள் வாங்கி மகிழ்வீர்கள். |
| மகரம்  | போட்டி இருக்கும். அகலக் கால் வைக்க வேண்டாம். சகபாடிகளை விமர்சிக்க வேண்டாம். ஓரளவு பணவரவு. வாகன பயணத்தில் அவதானம். குடும்ப உதவி. |
| கும்பம்  | நட்பால் கூடுதல் நன்மை. பணியில் சாதனை. தொழில் வளம் பெறும். கூடுதல் சேமிப்பு. ஆடம்பரப் பொருட்கள் வாங்குவீர்கள். சமூக சேவையிலும் ஈடுபாடு. |
| மீனம்  | முடியாதிருந்த வேலை முடியும். சந்தோசம் கூடும். தொழில், வியாபாரத்தில் திருப்தி. கூடுதல் பணவரவு. பழைய நண்பர் தொடர்பு. குடும்பத்தில் மங்கல நிகழ்வு. |


## இன்றைய ஆட்டம்

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

**பாகிஸ்தான்-பங்களாதேஷ்**
பல்லேகல மாலை 3.30 மணி

**மே.தீவுகள்-அயர்லாந்து**
கொழும்பு இரவு 7.30 மணி

# மோசமான பெறுபேற்றால் கவலை



(கொழும்பு)

உலக கிண்ண ருவென்ரி-20 தொடரில் சிம்பாப்வே அணி மிக மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தியமை ஏமாற்றம் அளிப்பதாக அவ்வணித் தலைவர் பிரென்டன் டெய்லர் தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணி தங்கள் திறமைக்கு ஏற்றவாறு திறமையை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

போட்டிகளில் வெற்றிபெறுவதற்கே நாங்கள் இலங்கைக்கு வந்தோம். இறுதியில் மிகவும் ஏமாற்றமான பெறுபேறுகளுடன் விடைபெற வேண்டி ஏற்பட்டுள்ளது. அடுத்தாண்டு ஏராளமான கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவேண்டியுள்ளது.எனவே, இப்போட்டிகளில் சிறப்பான முன்னேற்றத்தை வெளிப்படுத்தவேண்டிய தேவை எமக்கு உள்ளது. தொடர்ச்சியாக முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் சிறந்த நிலையை அடைய முடியும். வேறு வேறான கள நிலைகளில் எங்களது முன்னேற்றத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய மூன்றிலும் நாம் மோசமாகச் செயற்பட்டுள்ளோம். அத்தோடுபந்து வீச்சில் ஏராளமான ஓட்டங்களை விட்டுக் கொடுத்ததுடன், துடுப்பாட்டத்தில்ஓட்டங்களைப் பெறத் தவறியயே தோல்விக்கு முக்கிய காரணம்.

இவ்வாறான நிலைகளில் போட்டிகளில் வெற்றிபெற முடியாது. எங்களது திறமை வெளிப்பாடுகள் மிகவும் கீழ்நிலையில் காணப்பட்டது.

இனிவரும் காலங்களில் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த எதிர் பார்த்துள்ளோம். நிச்சயம் ஒருங்கிணைந்து விளையாடினால் அது வெளிப்படும் என்றார்.

# நியூசிலாந்து தொடரில் வாய்ப்பு கெவின் பீற்றர்சன் எதிர்பார்ப்பு

(லண்டன்)

அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிட்டதாக நம்புகிறேன். அதனால் நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் விளையாட வாய்ப்புள்ளது என பீற்றர்சன் தெரிவித்தார். சமீபத்தில் ஓய்வுபெற்ற இங்கிலாந்து கப்டன் ஸ்ரோஸ் கிண்டல் செய்து தென்னாபிரிக்க வீரர்களுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பிய விவகாரத்தில், பீற்றர்சனின் மன்னிப்பு கடிதத்தை ஸ்ரோஸ் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், தான் மீண்டும் அணிக்குத் தேர்வு செய்யப்படுவோம் என்று காத்திருக்கிறார் பீற்றர்சன்.

• இது தொடர்பாக டுவிட்டர் பக்கத்தில் பீற்றர்சன் மேலும் கூறியிருப்பது: பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாக நம்புகிறேன். அதனால் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடைபெறும் நியூசிலாந்துக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணியில் இடம்பெறுவேன் என்று நம்பிக்கைத் தெரிவித்துள்ளார். இதனிடையே பி.பி.சி. இக்கு ஸ்டிராஸ் அளித்துள்ள பேட்டியில், நானும், பீற்றர்சனும் பேசினோம். அவர் தனது செயலுக்கு மன்னிப்பு கோரினார். சில விடயங்களை வெளிப்படையாகப்பேசினோம். பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டன. நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். அவரைச் சந்தித்துப் பேசுவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எஸ்.எம்.எஸ். விவகாரத்தால் எங்கள் உறவில் எந்த விரிசலும் இல்லை என்று கூறியுள்ளார்.

# வில்வித்தையில் வெள்ளி

(டோக்கியோ)

உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்திய வீராங்கனை தீபிகா குமாரி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

உலககோப்பை வில்வித்தை போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்று வருகின்றன. இதில் இறுதி சுற்றுக்கு முன்னேறிய இந்தியாவின் தீபிகா குமாரி தென்கொரியாவின் உலகின் முதல் நிலை வீரரான போ பே கீ என்பவரைச் சந்தித்தார்.

ஆரம்பத்தில் நன்றாக விளையாடிய தீபிகா குமாரி பின்னர் கடுமையான போட்டிக்கிடையே 4- 6 என்ற புள்ளிகள் கணக்கில் போ பே கீயிடம் தோல்வியைத் தழுவினார்.

இப்போட்டியில் போ பே கீக்குதங்கப் பதக்கமும் இந்தியாவின் தீபிகா குமரிக்கு வெள்ளிப் பதக்கமும் வழங்கப் பட்டன. மூன்றாவதாக வந்த தென் கொரியாவின் ஹியோஞ்சு சோய் வெண் கலப்பதக்கத்தை வென்றார்.

தீபிகா குமாரி லண்டன் ஒலிம்பிக் போட்டியில் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து பிரீமியர் லீக்; வென்ற அணிகள்




இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரின் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் எவேர்ட்டன், செல்ஷி, சௌதம்டன், வெஸ்ட் ப்ரோம்விச், ஃபுல்ஹாம் ஆகிய அணிகள் வெற்றிபெற்றதோடு, வெஸ்ட்ஹும் யுனைட்டட், சன்டர்லான்ட் அணிகளுக்கிடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

ஸ்வான்சீ கழகத்திற்கும் எவேர்ட்டன் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் எவேர்ட்டன் கழகம் 3-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. அக்கழகம் சார்பாக 21ஆவது, 43ஆவது, 82ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டன.

செல்ஷி கழகத்திற்கும், ஸ்ரோக் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் செல்ஷி 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. அக் கழகம் சார்பாக 85ஆவது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டது.

சௌதம்டன் கழகத்திற்கும், அஸ்டன் வில்லா கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் சௌதம்டன் கழகம் 4-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.அஸ்டன் வில்லா கழகம் சார்பாக 35ஆவது நிமிடத்தில் கோல் பெறப்பட்ட போதிலும், சௌதம்டன் கழகம் 58ஆவது, 63ஆவது, 72ஆவது, 90ஆவது நிமிடங்களில் கோல்களை அடித்து இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

வெஸ்ட் ப்ரோம்விச் கழகத்திற்கும், ரெடிங் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் வெஸ்ட் ப்ரோம்விச் கழகம் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அக்கழகம் சார்பாக 71ஆவது நிமிடத்தில் கோல் பெறப்பட்டது.

வெஸ்ட் ஹும் யுனைட்டட் அணிக்கும் சன்டர்லான் அணிக்குமிடையிலான போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.போட்டியின் 10ஆவது நிமிடத்தில் சன்டர்லான்ட் அணி கோலொன்றைப் பெற்றுக் கொடுத்த போதிலும் போட்டியின் இறுதி நிமிடத்தில் வெஸ்ட் ஹும் யுனைட்டட் அணி கோலொன்றைப் பெற்றுப் போட்டியைச் சமநிலைப்படுத்தியது.

ஃபுல்ஹாம் அணிக்கும், விகான் அத்லட்டிக் அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் ஃபுல்ஹாம் அணி 2-1 என்ற கணக்கீல் வெற்றிபெற்றது. போட்டியின் 32ஆவது, 68ஆவது நிமிடங்களில் ஃபுல்ஹாம் அணி கோல்களைப் பெற்றுக்கொள்ள விகான் அத்லட்டிக் அணி போட்டியின் இறுதி நிமிடத்தில் கோலொன்றைப் பெற்றுக் கொண்டது.

# கிண்ணம் வெல்வது உறுதி



(டோக்கியோ)

பான் பசிபிக் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் மீண்டும் சம்பியன் பட்டம் வெல்வேன் என நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பான் பசிபிக் ரென்னிஸ் போட்டி நேற்றுத் தொடங்கியது. இதில் உலகின் முதல் நிலையிலுள்ள 20 வீராங்கனைகளில் 19 பேர் பங்கேற்பதால் பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ரஷ்ய வீராங்கனை ஷரபோவா, இந்தப் போட்டியில் 2005 மற்றும் 2009இல் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். காயங்களில் இருந்து விடுபட்டு தற்போது சிறப்பாக விளையாடி வரும் அவர், மகளிர் ஒற்றையர் தரவரிசையில் 2ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார். பான் பசிபிக் போட்டி குறித்து நேற்று முன்தினம் அவர் கூறியதாவது: இந்த ஆண்டு எனக்கு மிகச் சிறப்பாக அமைந்தது. பிரெஞ் ஓப்பனில் சம்பியன் பட்டம் வென்றதுடன் லண்டன் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் பெற்றதும் திருப்தி அளிக்கிறது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நல்ல உடல் தகுதியுடனும் உலகின் 2ஆவது வீராங்கனையாகவும் டோக்கியோ வந்திருக்கிறேன். இங்கு மீண்டும் சம்பியன் பட்டம் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. பான் பசிபிக் பட்டத்தை வென்று இந்த ஆண்டை இனிதே நிறைவு செய்ய விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

# ரென்னிஸ் சங்க நடவடிக்கைக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை



(பெங்களூர்)

நட்சத்திர ரென்னிஸ் வீரர்கள் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா இருவரும் டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டியில் விளையாட அகில இந்திய ரென்னிஸ் சங்கம் (ஏ.ஐ.டி.ஏ.) தடை விதித்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், ரென்னிஸ் சங்க நடவடிக்கைக்கு கர்நாடக உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.

லண்டன் ஒலிம்பிக் போட்டியின் ஆண்கள் இரட்டையர் பிரிவில் பயசுடன் இணைந்து விளையாட முடியாது என்று பூபதி, போபண்ணா இருவரும் போர்க்கொடி தூக்கினர். இதையடுத்து, அணியின் நலனுக்குப் புறம்பாக நடந்துகொண்டதாக அவர்கள் மீது ரென்னிஸ் சங்கம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. நாட்டுக்காக விளையாட அவர்களுக்கு 2014 ஜுன் 30 வரை தடை விதிக்கப்பட்டது. ரென்னிஸ் சங்கத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து பூபதி, போபண்ணா சார்பில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த மனுவை நேற்று முன்தினம் விசாரித்த நீதிபதி கவுடா, ஏஐடிஏ நடவடிக்கைக்கு இடைக் காலத் தடை விதித்ததுடன், இந்த பிரச்சினையில் விளக்கம் அளிக்குமாறு மத்திய விளையாட்டு அமைச்சகம் மற்றும் ரென்னிஸ் சங்கத்துக்கு அழைப்பாணை அனுப்பவும் உத்தரவிட்டார்.

இது குறித்து தற்போது கருத்து கூற மகேஷ் பூபதி மறுப்புத் தெரிவித்து வருகின்றார்.


# சகீர்கான் இந்தியாவின் சச்சின்

(கொழும்பு)


சகீர்கான் இந்தியாவின் சச்சின் போன்றவர். அவர் எதிர்வரும் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என இந்திய அணி கப்டன் டோனி தெரிவித்தார்.

சகீர்கான் குறித்து அதிகம் பேசுகின்றார். ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிகளைப் பொறுத்த வரை எந்தவொரு சிறந்த பந்து வீச்சாளருக்கும் நெருக்கடி ஏற்படும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் கடந்த சில போட்டிகளில் சகீர்கானின் பந்து வீச்சிற்கு அதிகளவான ஓட்ட எண்ணிக்கை பெறப்பட்டது உண்மையே. இருப்பினும் அவர் சம்பியன் வீரர். பந்துவீச்சில் அவர் இந்தியாவின் சச்சின் எனவும் தெரிவித்தார்.


# தேசியத்தில் சாதனை படைத்தோர் ஆளுநரால் கௌரவிப்பு



மன்னார் சென். சேவியர்


நெல்லியடி மத்திய. ம. வி.


மானிப்பாய் இந்துக் கல்லூரி


இளவாலை ஹென்றிஸ்


ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்


வவுனியா இறம்பைக்குளம் மகளீர்

(கொழும்பு)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் வட மாகாணம் சார்பாக சாதனை படைத்த ஆறு பாடசாலை அணிகள் வடமாகாண ஆளுநரினால் கௌரவிக்கப்பட்டனர். கடந்த 22ஆம் திகதி கொழும்பிலுள்ள வட மாகாண ஆளுநர் உப அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்த மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ், வவுனியா-இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, நெல்லிடிய மத்திய மகாவித்தியாலயம், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி ஆகிய பாடசாலை வீர, வீராங்கனைகள் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டனர். வெற்றி பெற்ற பாட-சாலை அணிகளின் வீர,வீராங்கனைகளை வடமாகாண ஆளுநர் பாராட்டியதுடன் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் (மாணவர் அபிவிருத்தி) சத்தியபாலன், வடபிராந்திய ஆணையாளர் எஸ்.எல்.டீன் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

(படம்: கே. நந்தகுமார்)

## நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி - 20 கிரிக்கெட்

# பங்குஜன் உத்தமன் அதிரடி
## கொக்குவில் கே.சி.சி.சி. வெற்றி



(யாழ்ப்பாணம்)

பங்குஜன், உத்தமன் ஆகியோரின் சிறப்பான அதிரடி ஆட்டத்தின் மூலம் யூனியன் அணிக்கெதிரான போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி வெற்றிபெற்றது.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத் தி-னால் யாழ். முன்னணி கிரிக்கெட் அணி களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி -20 கிரிக்கெட் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி. சி.சி. அணி பங்குஜன், உத்தமன் ஆகி யோரின் சிறப்பான அதிரடி ஆட்டத் தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக் கையைப் பெற்றது.

இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங் களைப் பெற்றது. இதில் பங்குஜன் 58, உத்தமன் 45, சாம்பவன் 22 ஓட் டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அருண் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 176 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யூனியன் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அல்சியன் 37, ஜொஸ்ஷன் 22, பிரசாத் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிலோஜன், சாம்பவன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக பங்குஜன் தெரிவானார்.

இப்போட்டித் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் மட்டுமே நடைபெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)

# மயூரன் அதிரடி ஆட்டம்
## சென்றலைட்ஸ் பரபரப்பு வெற்றி



(யாழ்ப்பாணம்)

பரபரப்பான போட்டியில் ஜொலி ஸ்ரார் அணியை யாழ். சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்றது.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத் தினால் யாழ். முன்னணி கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி -20 கிரிக்கெட் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டி ஒன்றில் ஜொலிஸ்ரார் அணியும், யாழ். சென்றலைட்ஸ் அணி யும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி மணிவண்ணின் சிறப்பான துடுப்பாட்டத் தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக் கையைப் பெற்றது. இறுதியில் ஜொலி ஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மணி வண்ணம் 6 சிக்ஸர்கள், மூன்று பவுண்டரி கள் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் சைலேஸ்வரன் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கோகுலன் இரண்டு, வியாசன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 164 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி நிலையில் களமிறங் கிய சென்றலைட்ஸ் அணி ஆரம்பம் முதலே அனைத்து வீரர்களும் சரசாரி யான ஓட்டங்களை குறைந்த பந்து களில் அடித்து அணியின் ஓட்ட எண் ணிக்கையைப் பேணிவந்தனர். இருப்பி னும், இறுதி மூன்று பந்துகளில் 12 ஓட் டங்களைப் பெறவேண்டிய பரபரப்பான கட்டத்தில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய மயூரன், 19ஆவது ஓவரின் நான்காவது, ஐந்தாவது பந்து களில் தொடர்ந்து இரு சிக்ஸர்களை அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இறுதியில் சென்றலைட்ஸ் அணி 19.5 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மயூரன் ஆட்டமிழக்காது ஐந்து சிக்ஸர்கள் அடங்கலாக 34 ஓட்டங் களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தார்.

மற்றும் பிரசாத் 20, எட்வேட் எடின் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சஞ்ஜித் இரண்டு விக்கெட் டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயனாக மயூரன் தெரிவானார்.

(எஸ்.பி.)

# இறுதியில் பாடுமீன், சென். மேரிஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்திற்குட்பட்ட கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு பாடுமீன், சென். மேரிஸ் அணிகள் தகுதிபெற்றன.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனமும், விளையாட்டு அமைச்சும் இணைந்து தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான முதற்கட்டப் போட்டிகள் பிரதேச ரீதியாக இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் எட்டு அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் முதலாவது அரை யிறுதிப் போட்டியில் சென். மேரிஸ் அணியும், குருநகர் அணியும் மோதின. இதில் சென். மேரிஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பாடுமீன் அணியும், சென் நீக்கிலஸ் அணியும் மோதின. இதில் பாடுமீன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எஸ்.பி.)

# தேர்தலின் பின்னால் கிழக்கின் நிலை


ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த நஜீப் ஏ. மஜீத் கிழக்கின் முதலமைச்சராகியிருக்கிறார்.

இந்த முதலமைச்சர் பதவியேற்பு குறித்து தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ள சம்பந்தன், தேர்தலுக்கு முன்பும் அதன் பின்னரும் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சியமைக்கப் போவதாக தாம் கூறி வந்ததாகவும், முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸிற்கு வழங்க தாம் தயாராக இருப் பதாக கூறியிருந்தபோதும், தம்மிடம் எதுவும் கூறாமலே முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க ஒப்புக் கொண்டது தவறு என சம்பந்தன் சிறுபிள்ளைத் தனமாக தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அரசுக்கெதிராக தமிழ் தேசிய விடுதலை இயக்கங்கள் உருவாகி யுத்தம் ஆரம்பமான காலத்திலிருந்து, யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படும் வரை தமிழ் இயக்கங்களாயினும் சரி அரசியல் கட்சிகளாயினும் சரி முஸ்லிம்களை இன ரீதியாக ஒதுக்கியும் அடக்கியும் கையாளுகின்ற ஒரு போக்கினையே கொண்டிருந் தமை உலகறிந்த விடயம்.

முன்னர் விடுதலைக்காக எனக் கூறி முஸ்லிம் இளைஞர்கள் தமிழ் விடுதலை அமைப்புக்களில் இணைக்கப்பட்டமையும் பின்னர் முரண்பாடுகள் கூர்மையடைந்த பின்னர் இனத்துரோகிகளாக முஸ்லிம்கள் சித்திரிக்கப்பட்டு தமிழ்ச் சூழலில் இருந்து அவர்கள் அப்புறப்படுத்தப்பட்ட தையும் முஸ்லிம்கள் மட்டுமன்றி தமிழ் மக்களும் நன்கறிவர்.

தொடர்ச்சியாக கிழக்கிலும் வடக்கிலும் முஸ்லிம்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றியமையும் பள்ளிவாசல் தொழுகையின் போது அவர்கள் கொல்லப் பட்டமையும் நாடறிந்த நிகழ்வுகள்.



புலிகளும் அழிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இவைபற்றி தமிழ் தலைமைகள் எவ்வித அனுதாபத்தையோ கண்டனத்தையோ தெரிவிக்க முன்வராத அவர்களின் தமிழ்ப்பற்று என்பது வரட்டுத்தனமான குறுகிய நலன் கொண்ட தமிழ் இனவாத உணர்வின் வெளிப்பாடாகவே முஸ்லிம்களால் பார்க்கப்படுகிறது.

வெறும் வாக்கு வேட்டையை மட்டும் கவனத்தில் கொண்டு ஏனைய அனைவரையும் விலக்கிச் செயற்பட்டதன் விளைவுதான் இன்று கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முஸ்லிம்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்படுவதற்கான பிரதான காரணமாகும்.

கிழக்கைப் பொறுத்தவரை தமிழ், முஸ்லிம் மக்கள் தமது தொழில், உற்பத்தி, மற்றும் சந்தைப்படுத்தலுக்காக இருதரப்பினரும் பரஸ்பரம் ஒருவரில் ஒருவர் தங்கி இருக்கும் வாழ்க்கைச் சூழலில் அதிலும் வெளியே கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்காக முஸ்லிம்களுடன் நெருக்கமான தொடர்பை கிழக்குத் தமிழர்கள் பேணிவந்த ஒரு சூழலில் இருதரப்புக்குமிடையிலான இனப்பூசல்கள் தீவிரமடைந்து மக்களின் இயல்பு வாழ்க்கை மிக மோசமான நிலைக்குள் தள்ளப்பட்டிருந்த போதும் கூட கிழக்கில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் குறித்து எதுவுமே கூட்டமைப்பினர் பேசாதிருந்தமை என்பது அவர்களது அப்பட்டமான அரசியல் சுயநலத்தின் ஒரு வெளிப்பாடேயாகும்.

சரி, இந்த நிலமை- களை போர்ச்சூழலின் ஒரு பக்கவிளைவாக நாம் எடுத்துக் கொண்டாலும், புலிகளின் மறைவுக்குப் பின்னராவது அந்தத் தவறுகள் பற்றி எதுவும் கூறத் துணியாத கூட்டமைப்பினரின் மனோபாவம் என்பது அழிவின் பெயரால் அரசியல் நடத்தும் அவர்களின் இனவாத உணர்வின் தன்முனைப்பேயன்றி வேறெதுவுமல்ல.

உண்மையில் புலிக- ளின் வீழ்ச்சியுடன், ஏற்கனவே நிலவி வந்த தமிழ் - முஸ்லிம் முரண்பாடுகளுக்கு ஒரு முடிவை எட்டக் கூடிய வகையில் போர்ச்சூழலின்போது முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக கூட்டமைப்பினர் தமது மனந்திறந்த சுயவிமர்சனத்தை வெளிப்படையாக நேர்மையாக முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் அதற்குத் தவறியது மட்டுமன்றி போருக்குப் பின்னரான சமாதான சூழலிலும் இன நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை கூட்டமைப்பினர் திட்டமிட்டே தவிர்த்து வந்திருக்கிறார்கள்.

தமிழ் தரப்பிலிருந்தும் தனக்கு ஆதரவான அணியை அரசு திரட்டிக்கொள்ளும் இன்றைய புதிய அரசியல் சூழலில் கூட்டமைப்பினருடன் இணைந்து கொள்வதை விட, பதவியில் இருக்கும் அரசை ஆதரிப்பதன் மூலம் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்காக அதன் தலைவர்கள் முயற்சிப் பதை முஸ்லிம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளாக சம்பந்தன் சித்திரிக்க முயற்சிக் கிறார். இது உண்மையில் கூட்டமைப்பினரின் அரசியல் குறித்து முஸ்லிம்கள் எவ்வாறாக சிந்திக்கிறார்கள் என்பதை சரியாக அறிந்து கொள்ளமுடியாதிருக்கும் அவரது அப்பாவித்தனமான அல்லது தெரிந்துகொண்டே ஏமாற்றும் அரசியலையே வெளிப்படுத்துகிறது.

நடந்து முடிந்த தேர்தலின் பின்னால் சில விடயங்கள் கவனத்துக்குரியவையாகின்றன. தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இத்தேர்தலில் மிகக் குறைவான வாக்குகளையே பெற்றிருக்கிறார்கள். இணைந்து போட்டியிட்ட ஏனைய தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கூடுதல் வாக்குகளைப் பெற்று தெரிவாகியிருக்கிறார்கள்.

நிலைமைகளை அவதானிக் கும்போது கூட்டமைப்பினரின் அரசுக்கு எதிரான கோஷங்கள் இம்முறை எடுபடவில்லை என்பதுடன் வடக்கு கிழக்கு

**- சாலையூரான் -**

இணைப்பு, வடக்கு தலைமை களின் அரசியல் மேலாண்மை என்பவற்றையும் கிழக்கு மக்கள் நிராகரித்திருப்பதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.


மொத்தத்தில், போர்ச்[illegible]ில் பேசிய அரசுக்கெதிரான இனவாத அரசியலை போரின் முடிவுக்குப் பிறகும் பேசி ஏமாற்று அரசியல் நடத்த முடியாது என்பதை கிழக்கு மக்கள் தமிழ் தேசியக் கூட்ட மைப்பினருக்கு தெளிவாக்கி யிருக்கிறார்கள்.

கூடவே கிழக்கின் மேம்பாடு கருதி வெளிப்படையான இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் நிலையான அமைதிச் சூழலை அங்கு பேணவும் மூவின மக்களுமே ஆவலாக இருப்ப தையும் தேர்தல் முடிவுகள் மூலம் கிழக்கு மக்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

---

சமகால பொது அறிவுத்தொகுப்பாக, சி.என்.எச்.சாள்ஸ் அவர்களை தொகுப்பாசிரியராகக் கொண்டு 2012 ஜுலை மாத 'வலை' எனும் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

# ஆழமான தேடலுக்கு வலை விரிக்கும் "வலை"




தற்போதைய காலகட்டத் தில் வணிகரீதியாகவும் அறிவுசாரந்த மற்றும் ஆக்கவி யல் தேடலாகவும் பலசஞ்சி கைகள் வெளிவந்து கொண்டி ருக்கும் நிலையில், கைக்கு அடக்கமாகவும் பதினாறுபக்கங் களுடனும் பத்தாவது இதழாக இச்சஞ்சிகை வெளிவந்நுள்ளது.

"ஆழமான தேடல் அறிவின் திறவுகோல்" எனும் தாரகமந் திரத்துடன் தற்போது நாட்டில் நிலவும் வறட்சிநிலை சம்பந்தமாக அதனால் ஏற்படுகின்ற தாக்கங் களையும் அதற்கு மாற்றீடான வழிகளையும் ஆசிரியர் தன் முன்பக்கத் தலையங்கத்தினூடு, இலங்கை, இந்திய, உலகநாட்டுச் சம்பவங்களுடன் விளையாட்டுப் பற்றியதான நிகழ்வுகளையும் தொகுத்துத் தந்துள்ளார்.

தேடல் என்பது அதுவொரு இலகுவான விடயமல்ல. எல்லா நேரங்களிலும் அது செய்யக்கூடியதுமல்ல. நாளாந்தப்பணியோடு தரமான விடயங்களாகத் தேடி எடுத்துச் சேகரிப்பது மிகவும் சிரமமான நிலையில், இச்சஞ்சிகையின் தொகுப்பாசிரியர் அச்சிரமத்தைப் பாராது பயனுள்ள ஒரு சஞ்சிகையை வெளிக்கொணரச் செயற்படுவது பாராட்டத்தக்கதாகும்.

**தொடர்புகளுக்கு.**
**சி.என்.எச்.சாள்ஸ்,**
**இல.163, செம்மணிவீதி,**
**தொ.பே.இல.077 691 3337**
**விலை.20ரூபா**

---

ஜோர்ஜ் லூயி போர்ஹே "காஃப்காவின் முன்னோடிகள்" என்று எழுதியுள்ள கட்டுரையில் "உண்மை என்னவென்றால் ஒவ்வொரு எழுத்தாளனும் அவன் முன்னோடிகளை சிருஷ்டித்துக் கொள்கிறான்" என்கிறார். கலையுலகில், இலக்கியத்தில், சினி- மாவில் இது காலங்காலமாக இருந்து வருவதுதான். ஆதிகவியிலிருந்து கம்பர், துளசிதாசர் என்று எத்தனை பேர் எழுதியுள்ள "ஒரிஜினல்" இராமாயணங்கள்.

தஸ்தாயெவ்ஸ்கி கோகோலைப் பற்றிச் சொல்லும்போது, "ரஷ்ய எழுத்தாளர்களான நாம் அனைவரும் கோகோலின் "ஒவர்கோட்"டுக்குள்ளிருந்து வந்தவர்கள்" என்கிறார். ஜெயகாந்தன் இதைப் "பாரதி யுகம், நாமனைவரும் அவனிடமிருந்து வந்தவர்கள்" என்கிறார்.

இவையெல்லாம் முன்னோடிகளை உருவாக்கிக்கொள்வது. இன்னுமொன்று இருக்கிறது. அது பிரக்ஞைபூர்வமாக ஒன்றைப்போலவே, தன் பங்களிப்பு எதுவும் இல்லாமல் செய்வது. இதை "இன்ஸ்பைரேஷன்" "ஹெவிலி இன்ஸ்பையர்ட்" "ஈயடிச்சான் காப்பி" என்று பலவாறு அவற்றின் நகல்தன்மைக்கு ஏற்ப சொல்கிறோம்.

சில வருடங்களுக்கு முன் "மிஷ்கின்" (தஸ்தாயெவ்ஸ்கியின் இடியட் கதாபாத்திரத்தின் பெயர்) என்கிற பெயரில் மயங்கி அவர் இயக்கிய "சித்திரம் பேசுதடி" பார்த்தேன் மகிழ்ந்தேன். தொடர்ந்து "அஞ்சாதே" பெரும் ஏமாற்றம். இப்போது "நந்தலாலா" பார்க்க வேண்டும் என்றதும் "kikujiro" பற்றி தெரியவந்தது. இப்போது "சித்திரம் பேசுதடி" பற்றியே கவலை வந்து விட்டது. "Kiku- jiro" வுக்கு நன்றி சொல்லியிருந்தால் பரவாயில்லை. என்ன செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. படம் பார்க்கும் ஆர்வம் போய்விட்டது.

"மன்மதன் அம்பு" கதையைக் கேள்விப்பட்டதும் சடாரென்று "டோபோல்" நடித்த "ஃப[illegible]ா மீ" நினை[illegible] வருகிறது.

"இது மாதிரி கொப்பி; அடிப்பதில் என்ன தவறு? ஒ[illegible] நல்ல படத்தை ஒழுங்காக தமிழில் தருவதால் பிற மொழ[illegible] தெரியாதவர்கள் அதைப் பார்த்து அனுபவிக்கலாம் அ[illegible] என்று ஒரு கருத்து இருக்கிறது. மேலும் பொதுஜனங்க[illegible] இதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவது இல்லை. "என்னமா எடுத்திருக்கான்யா?" என்று வியந்து புகழ்ந்[illegible] தள்ளிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

பாரதியின் எழுத்துகளின் அத்தனை உரிமையும், அ[illegible] துணை நிற்கும் ஆத்ம சுத்திகரிப்பும், அவையீட்டும் உ[illegible] அபிமானங்களும் அவருக்கன்றி அவர் எழுதிய பத்திரி[illegible] காகிதங்களையே சாரும், கம்பனின் கவி மேதைமை மீத[illegible] காதல் அவர் கை ஓலைச் சுவடிகளுக்கே என்பது போல் [illegible] இருக்கிறது. இத்தகைய சூத்திரத்தை ஆமோதித்து, பிற[illegible] உழைப்பை, அறிவை, தொழிலை வெட்கமின்றி அபகரி[illegible] பணம் பண்ணுபவர்கள் "திருட்டு விசிடி (டிவிடி) பற்றி [illegible] குய்யோ முறையோ என்று அலறுவதுதான் விந்தை. அ[illegible] திருட்டு விசிடிக்களைச் செய்பவர்களுக்கும் இவர்களுக்[illegible] என்ன பெரிய வித்யாசம்?

கண்டுபிடிக்கப்படாவிடில், குற்றாஞ்சாட்டப்படாவி[illegible] அகப்பட்டுக்கொள்ளாவிடில், ஆள் தெரிந்திருக்காவிடி[illegible] என்பன போன்ற பல "விடில்"களுக்கு அப்பால் சுகமாக கொலுவீற்றிருக்கும் இந்த "கலைஞர்கள்" அல்லது சினி[illegible] வியாபாரிகள் இது போன்ற தூய "மோரல்" சம்பந்தமா[illegible] மனக் கிலேசங்களால் துன்புறுவதும் இல்லை. "ஐயோ" [illegible] போவதும் இல்லை. சொல்லப் போனால் அவர்கள் செ[illegible] செல்வாக்கும் அதிகரித்துத்தானிருக்கிறது. இதில் வியாப[illegible] ரிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் பரவாயில்லை. [illegible] கலைஞர்கள் என்று போற்றப்படுபவர்கள்தான்"

காப்பிப் பூனைகளைவிட, சுயமாக படம் எடுப்பவர்கள்தான் மேல் என்கி[illegible] சிந்தனையும் சினிமாவை, கலை[illegible] சீரியஸாக எடுத்துக் கொள்பவ[illegible] மத்தியில் இருக்கிறது. சுயமாக எடுப்பவர்கள் வணிகத் தோல்வி[illegible]



# முன்னோடிக[illegible]

# நான் என்பது நானல்ல!



மன்னன் ஒருவன் இருந்தான். ஆணவம் மிக்கவன். அமைச்சரை அழைத்து, "அமைச்சரே, நான் இறைவனைக் காண வேண்டும். அதற்கு என்ன வழி?" என்று கேட்டான்.

"நம் நாட்டு எல்லையில் ஒரு மாமுனிவர் இருக்கிறார். அவரிடம் கேட்டால் இறைவனைக் காண வழி சொல்லுவார்" என்றார் அமைச்சர்.

அரசனும் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டு, முனிவர் இருந்த இடத்தை அடைந்தான்.

முனிவரும் வந்திருப்பது அரசன் என்று அறிந்தும், அறியாதது போல "மகனே, நீ யார்? உனக்கு என்ன வேண்டும்?" எனப் பரிவுடன் கேட்டார்.

மன்னனுக்குக் கோபம் வந்தது. "என்னைப் பார்த்தா யார் என்று கேட்கிறார்" என நினைத்தான்.

எனினும் கோபத்தை அடக்கிக் கொண்டு, "நான் இந்நாட்டு அரசன். இறைவனைக் காண எனக்கு வழி சொல்லுங்கள்" என்று ஆணவம் கலந்த தொனியில் கேட்டான்.

"இறைவனைக் காண வேண்டுமா? நான் செத்த பிறகு வா" என்று அழுத்தமாகக் கூறிவிட்டு, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார் முனிவர்.

மன்னனுக்குக் கோபம் வந்தது. "நீங்கள் செத்த பிறகு எப்படி வர முடியும்? எப்படி என்னோடு பேசுவீர்கள்?" என்று கேட்டான்.

"நான் என்பது நானல்ல! உன்னுள் இருக்கும் "நான்" என்ற ஆணவம். அந்த ஆணவம் முதலில் சாக வேண்டும். அதனால்தான் நான் செத்த பிறகு வா, என்றேன். அதுவரை நீ இறைவனைக் காணும் வழியை அறிய முடியாது" என்றார் முனிவர்.

மன்னன் யோசிக்க ஆரம்பித்தான்.

நம்மை நாமே அறியாமல் இருப்பதுதான் இந்த நான் என்ற ஆணவம். நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பதை உணராத அறியாமையால் ஏற்படுவதே இந்த நான் என்ற இறுமாப்பு. இந்த ஆணவம் அழிந்தால்தான் ஆனந்தத்தை அடைய முடியும்!

# விந்தையோ விந்தை...

- வேங்கைப் புலிக்கு பலாமர நிழலில் இளைப்பாறவே விருப்பம்.
- கருங்குயில் மாமரத்தில்தான் தங்கும்.
- குயிலுக்கு மாம்பழமும் நெல்லிக்கனியும்தான் விருப்பம்.
- பிச்சிப் பூ மழை நாட்களில் சிவந்து காணப்படும்.
- பாரசீக மக்கள் மாதுளம் பூவையும் பிரெஞ்சுக்காரர்கள் ரோஜாப் பூவையும் ஆங்கிலேயர்கள் செர்ரி மலரையும் கிரேக்கர்கள் ஒலிவ மலரையும் ரோமானியர்கள் முந்திரி மலரையும்தான் அதிகம் விரும்புகிறார்கள்.

# வன்முறை அரசியலுக்கு தள்ளியதில் தமிழர் கூட்டணிக்கு முக்கிய பங்கு

## - கலாநிதி எம்.ஏ.நுஃமான் காலச்சுவடு நேர்காணலில்.



தமிழ்த் தேசியவாதம் ஆரம்பத்தில் மொழித் தேசிய வாதமாகத்தான் மேற்கிளம்பியது. 1950களில் தமிழ் மக்கள் மத்தியில் மொழியுணர்வு கொழுந்துவிட்டெரிந்தது. தமிழரசுக் கட்சியும் அவர்களது சுதந்திரன் பத்திரிகையும் அதற்கு நெய்யூற்றி வளர்த்தன. தமிழ்க் கவிஞர்கள் ஆர்ப்பாட்டமான போர்ப் பாடல்களைப் பாடினர். தமிழ் உணர்ச்சியை ஒரு கருவியாகப் பயன்படுத்தித் தமிழர்கள் மத்தியில் தமிழரசுக் கட்சி தனிப்பெரும் அரசியல் சக்தியாக மேற்கிளம்பியது. மொழி உரிமைப் போராட்டத்தை வடகிழக்கு முஸ்லிம்களும் ஆதரித்தனர். ஆனால் தென்னிலங்கை முஸ்லிம்கள் அதைத் தங்களின் பிரச்சினையாகக் கருதி அதற்கு ஆதரவு அளிக்கவில்லை. அவர்கள் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசத்தில் வாழ்வதும் சிங்களமும் தமிழும் பேசக்கூடியவர்களாக இருப்பதும் அதற்குக் காரணம் எனலாம்.

தமிழ்நாட்டில் பார்ப்பனர் சிறுபான்மையினராக இருந்தாலும் பிரித்தானிய ஆட்சியில் ஆங்கிலக் கல்வி காரணமாகப் பொருளாதாரரீதியிலும் கல்வியிலும் அவர்களே மேலாதிக்கம் பெற்றிருந்தனர். இதற்கு எதிராகவே 1930களிலிருந்து இடைப்பட்ட சாதியினர் பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதை ஒத்த நிலைமை இலங்கையிலும் காணப்பட்டது. பிரித்தானிய ஆட்சியில் ஆங்கிலக் கல்வி வாய்ப்பு அதிகம் பெற்ற யாழ்ப்பாண உயர்சாதி நடுத்தர வர்க்கத்தினர் நிருவாகத் துறையில் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். சிங்கள நடுத்தர வர்க்கத்தினர் இதற்கு எதிராகச் செயற்படத் தொடங்கியதன் விளைவுதான் சிங்களம் மட்டும் ஆட்சிமொழிச் சட்டம். அதன் பிறிதொரு விளைவுதான் இன ஒதுக்கல். இன்று அரச நிருவாக யந்திரம் முழுமையாகச் சிங்களமயமாக்கப்பட்டுவிட்டது. இன்று மொத்த அரச ஊழியர்களில் தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் 8 விழுக்காடுதான் இடம்பெற்றுள்ளனர். இதில் பள்ளி ஆசிரியர்களும் உள்ளடக்கம். இந்தப் புறக்கணிப்பும் பாராபட்சமும்தான் யுத்தத்துக்கும் புலப்பெயர்வுக்கும் இட்டுச்சென்றன...

1956இல் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆட்சியாளர் வன்முறையைப் பயன்படுத்தி அடக்கினர். அதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட ஜனநாயக வழியிலான எல்லாப் போராட்டங்களும் இவ்வாறுதான் தோல்வியில் முடிந்தன. இதன் விளைவாகத்தான் வேறு வழியில்லாத நிலையில் ஆயுதப் போராட்டம் உருவானதாக ஒரு கருத்து உண்டு. ஆனால் இது முழு உண்மையல்ல. அதற்கு வேறு சில காரணங்களும் இருந்தன. அதில் முக்கியமானது யாழ்ப்பாண இளைஞர்களின் உயர்கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது எனலாம். 1972இல் அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதிக்குத் தரப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தியது. அதுவரை பல்கலைக்கழக அனுமதியில் மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் யாழ்ப்பாண இளைஞர்கள் முன்னணியில் இருந்தனர். இத்தரப்படுத்தல் முறையால் கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மாணவர்கள் பெரிதும் நன்மை அடைந்தனர் எனினும், யாழ்ப்பாண மாணவர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். கல்வி வாய்ப்பு, தொழில் வாய்ப்பு என்பவற்றில் நம்பிக்கை இழந்த மாணவர்கள் வன்முறை அரசியலில் எளிதாக ஈர்க்கப்பட்டனர். யாழ்ப்பாண இளைஞர்களை வன்முறை அரசியலுக்கு ஆற்றுப்படுத்தியதில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு முக்கிய பங்கு உண்டு என்பதையும் நாம் மறுக்க முடியாது. அதன் பயனைப் பின்னர் அவர்களே அறுவடை செய்யவும் நேர்ந்தது.

அழிக்கப் பட்டாலும் கம்பீரமானவர்கள், சுய மரியாதை உள்ளவர்கள். சுயூ மரியாதை என்பது "பொய் சொல்லாமல், ஊழல் செய்யாமல், பிறரெவரையும் அவமரியாதை செய்யாமல் இருப்பதுதானே?


கீழேயுள்ள தமிழ்ப் படங்களையும் வேற்று மொழிப் படங்களையும் ஒன்றுடன் ஒன்று பொருத்துங்கள் பார்க்கலாம். - விடை கடைசியில்.

| தமிழ்ப்படம் | பிறமொழிப்படம் |
|---|---|
| புதிய பறவை | - சேஸ் எ க்ரூக்கட் ஷடோ |
| தாமரை நெஞ்சம் | - ஸ்லெண்டர் த்ரெட்ஸ் |
| நாணல் | - டெஸ்பரேட் ஹவர்ஸ் |
| அழியாத கோலங்கள் | - சம்மர் ஓஃப் ஃபார்ட்டி டூ |
| ரெட்டைவால் குருவி | - மிக்கி அண்ட் மாட் |
| கஜினி | - மொமென்டோ |
| மூன்றாம்பிறை | - ரோமன் ஹொலிடே |
| எனக்குள் ஒருவன் | - ரீ-இன்கரனேஷன் ஓஃப் பீடர் ப்ரௌட். |
| மகளிர் மட்டும் | - நைன் டு ஃபைவ் |
| ட்வெல்வ் பி | - ஸ்லைடிங் டோர்ஸ் |
| சாந்தி நிலையம் | - சவுண்ட் ஓஃப் ம்யூசிக் |
| ஔவை சண்முகி | - மிஸர்ஸ் டௌட் ஃபையர், டூட்ஸி |
| ஜூலி கணபதி | - மிஸரி |
| பச்சைக்கிளி முத்துச்சரம் | - டிரெயில்ட் |
| நாயகன் | - கோட் ஃபாதர் |
| ராஜி என் கண்மணி | - சிடி லைட்ஸ் |
| ரங்கோன் ராதா | - கேஸ் லைட் |
| நாடோடி மன்னன் | - ப்ரிஸனர் ஓஃப் ஜெண்டா |
| நல்ல தம்பி | - மிஸ்டர் டீட்ஸ் கோஸ் டு டௌன். |
| சொர்க்க வாசல் | - க்வீன் க்றிஸ்டினா. |
| மே மாதம். | - ரோமன் ஹொலிடே |
| குணா | - டை மீ அப் - டை மீ டௌன் |
| யோகி | - TSOTSI |

- வ.ஸ்ரீநிவாசன் -




விடை :- பொருத்திப் பார்க்க என்னை இருக்கிறது? இடது புறமுள்ள தமிழ்ப்படங்கள் வலதுபுறப் படங்களை தகுந்த அனுமதியுடனோ அல்லது அனுமதி இன்றியோ, தழுவி, அல்லது இறுகத் தழுவி எடுக்கப்பட்டவை என்று சொல்லப்படுகின்றன.



# மருத்துவமனை ஒன்றில் எழுதியிருந்தது

வேலை நேரம் - வெற்றியின் விலை
சிந்தனை நேரம் - அறிவின் ஊற்று
தொழும் நேரம் - ஞானத் திறவுகோல்
விளையாடும் நேரம் - இளமை இரகசியம்
வாசிக்கும் நேரம் - உயர்வின் ஏணி
நன்மை செய்யும் நேரம் - மகிழ்ச்சியின் வழிகாட்டி
குடும்பத்துக்கான நேரம் - உறவின் பொக்கிஷம்
ஓய்வின் நேரம் - புது வலிமைக்கு வாசல்
மகிழும் நேரம் - வாழ்வுக்கு ஊக்கம்
பயண நேரம் - இதமான அனுபவம்

னோடிகளும், பின்வந்தவர்களும், ஈயடிச்சான்களும்

ஒரு விளையாட்டு வீரனின் வாழ்க்கையில், விதி விளையாடிய உண்மைக்கதை இது. ஏழுமுறை தேசிய விளையாட்டுக்களில் தங்கப்பதக்கம் வாங்கிய ஒரு தடகளவீரன், திடீரென்று தடம்மாறி துப்பாக்கி தூக்கி சம்பல் பள்ளத்தாக்கில் கொள்ளைக்காரனாக மாறி கோலோச்சி பிறகு பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட அதிர்ச்சியும் சோகமும் ததும்பும் உண்மைச் சரிதம் இது.

இயக்குநர் திக்மன்சு தூலியா. பான்சிங் கதாபாத்திரத்தில் இர்ர்ர்.'.பான். (பெயரில் ர்ர்ர் என்ற ஒரு அரவைச்சத்தம் வேண்டுமாம் இர்.'.பானுக்கு) கதை என்ன? ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒன்பது பேரைக்கொலை செய்த குற்றத்துக்காக அரசாங்கம், பான்சிங் தோமர் என்ற சம்பல் பள்ளத்தாக்கு கொள்ஹுளக்காரனைத் தேடிவருகிறது. பல இடைஞ்சல்களுக்கிடையே, ஒரு பத்திரிகைக்காரன், எப்படியோ தட்டுத் தடுமாறி பான்சிங்கை இரகசியமாகச் சந்தித்து பேட்டி எடுக்கிறான். அவனிடம் பான்சிங் தன் வரலாற்றைச் சொல்கிறான்.

# பான்சிங் தோமர்




1950ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தில் வந்து சேர்கிறான் பான்சிங். வந்து சேரும்போதே ஒருமணி நேரம் லேட். தண்டனையாக சுமைகளை தூக்கிக் கொண்டு மைதானத்தைச் சுற்றி பத்து ரவுண்ட் ஓடச் சொல்கிறார் மேஜர். மற்றவர்கள் தஸ்புஸ் என்று ஐந்தாவது ரவுண்ட் ஓடிக்கொண்டிருக்க, காற்றில் பறவையாய் பத்து ரவுண்ட் ஓடிவிட்டு வந்து நிற்கிறான் தோமர். நம்பமுடியாத மேஜர், மீண்டும் பத்து ரவுண்ட் தண்டனை விதிக்கிறார். 25 கிலோ எடையுடன் ஓடும் அவனது இலகுவான ஓட்டம் மேஜரை திகைக்க வைக்கிறது.

பான்சிங்குக்கு எப்போதும் பேய்ப்பசி. மற்றவர்கள் ஐந்து சப்பாத்தி சாப்பிட்டால் அவன் 25 சப்பாத்தியை அசால்டாக கபளீகரம் செய்கிறான். கடுப்படிக்கும் மேஜர், "இதென்ன கல்யாணபந்தியா? இராணுவ முகாம். இங்கே ரேஷன் உண்டு' என்று திட்ட, "பசி தாங்கமுடியவில்லை"என்று பான்சிங் சொல்ல, "பேசாமல் ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் போய்ச் சேரு, அங்கேதான் உணவுக்குக் கட்டுப்பாடு கிடையாது" என்கிறார் மேஜர்.

அது சம்பந்தமான மேலதிகாரியை போய்ச் சந்தித்து, நான் நன்றாக ஓடுவேன், என்னை விளையாட்டு கோட்டாவில் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று பான்சிங் விண்ணப்பிக்க, அவர் தன்கையிலிருக்கும் ஒருகிலோ ஐஸ்கிரீமை அவன் கையில் கொடுத்து, இது உருகுவதற்குள் இதை என் வீட்டில் நீ ஒப்படைத்து விட்டால் உன்னைச் சேர்த்துக் கொள்கிறேன் என்கிறார். அதை எடுத்துக்கொண்டு மேஜர் வீட்டுக்கு தலை தெறிக்க ஓடும் பான்சிங், சொன்ன நேரத்துக்கு நான்கு நிமிடம் முன்னமேயே போய் அதை ஒப்படைக்கிறான். ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் இடம் பெறுகிறான்.

**பூலான்தேவியை மையமாகவைத்து சேகர்கபூர் இயக்கிய 'தி பன்டிட்குயின்' படத்தின்போது அவருடன் சேர்ந்து பணியாற்றியவர் திக்மன்சு தூலியா. பூலான்தேவியைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்போது, பான்சிங் தோமர் என்ற விளையாட்டு வீரர் சம்பல் பள்ளத்தாக்கில் கொள்ளைக்காரனாக மாறிய சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டு ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்து, கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஆராய்ச்சி செய்து, அவரது குடும்பத்தினரை நேரில் சந்தித்து தகவல் திரட்டி, சம்பல் பள்ளத்தாக்கில் பான்சிங் தோமர் வாழ்ந்ததோல்பூர், ரூர்கிபோன்ற இடங்களில் சஞ்சரித்து அங்கேயே இந்தப் படத்தையும் இயக்கி இருக்கிறார்.**

சாப்பிடுவதற்காகவே இராணுவத்தின் விளையாட்டு பிரிவில் சேர்ந்த பான்சிங், ஓட்டப்பந்தயங்களில் சாதனைகளும் படைக்க ஆரம்பிக்கிறான்.

முதலில் குதிரைகளுக்கு மட்டுமேயான பந்தயமாக இருந்து, பின் மனிதர்களுக்குமான போட்டியாக மாறிய ஹேர்டில்ஸ் எனப்படும் தடைதாண்டும் தடகளப் போட்டியில் அவனுக்குப் பயிற்சி அளிக்கிறார் கோச். ஓட்டப்பந்தய வீரன் ஆக எந்த விருப்பமும் இல்லாத பான்சிங், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக பட்டை தீட்டிய வைரமாகிறான்.

தேசிய அளவில் பங்குபெற்று ஏழு வருடங்கள் தொடர்ந்து தடகளத்தில் தடதடவென தங்கப்பதக்கம் வாங்கிக் குவிக்கிறான். 1958ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்கிறான். ஆனால் கடைசிநிமிடம் பந்தயத்துக்கு முன் அவனுக்கு ஸ்பைக் ஷு தரப்பட்டு, அதை அணிந்துதான் ஓடவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டதால், அவனால் அந்தப் போட்டியில் வெற்றிபெற முடியவில்லை. இத்தனைக்கும் ஓடிக்கொண்டிருக்கும்போதே அந்த ஷுவைக் கழற்றி வீசிவிட்டு, வெறுங்காலில் ஓடி ஜெயிக்க முயற்சி செய்கிறான். அந்த ஆசிய போட்டியில் கலந்து கொண்டதில் ஒரே ஆறுதல் பரிசு, ஒரு ஜப்பானிய பெண் அவனுக்கு "ஐ லவ் யூ" சொல்லி போட்டோ எடுத்துக்கொண்டதுதான்.

1962 மற்றும் 1965இல் நடைபெற்ற போர்களில் பங்குகொள்ள பான்சிங் துடித்தாலும், விளையாட்டு வீரர்களுக்கு போரில் பங்குகொள்ள அனுமதி இல்லை என்று மேலதிகாரி மறுப்பதும், "கிராமத்துக்குப் போகமுடியாது, மானக்கேடாக ஆகிவிடும், தயவுசெய்து அனுப்புங்கள்" என்று பான்சிங் கெஞ்சுவதும், சகவீரர்கள் அவனைக் கிண்டல் அடிப்பதும், அந்தக் கோபத்தைக் காட்ட விளையாட்டு மைதானத்தையே போர்க்களமாக மாற்றி வெற்றிகள் குவிப்பதும் நயமான காட்சிகள்.

கிராமத்தில் பான்சிங்கின் அண்ணன் குடும்பத்துக்கும் உறவுக்காரன் பன்வார்சிங் குடும்பத்துக்கும் பகை இருக்கிறது. கொடுக்க வேண்டிய கடனுக்காக அண்ணன் நிலத்தில் மட்டுமல்ல, பான்சிங் நிலத்திலும் கரும்பு வெட்டி எடுத்துச்சென்று விடுகிறான் பன்வார்சிங். எதிர்த்து கேட்டபோது அடிஉதை விழுகிறது. கொலைமிரட்டல் விடுக்கப்படுகிறது.

இந்தப் பிரச்சினைகள் காரணமாக, பான்சிங் தன் வேலையை இராஜினாமாச் செய்துவிட்டு கிராமத்துக்குத் திரும்புகிறான். அவனுக்குக் கிடைக்கும் கோச் வேலையையும் விட்டுவிடுகிறான். அதற்குள் பான்சிங் அண்ணனின் நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறான் பன்வார்சிங்.

- ப்ரஸன்னா

பொலிஸ் உதவி செய்யும் என்ற நப்பாசையில் தன் மெடல்கள், சேர்ட்டிபிகேட்களுடன் பொலிஸ்நிலையம் செல்கிறான் பான்சிங். அவற்றைத் தூக்கி வீசி அவனை கேவலப்படுத்தி அனுப்பிவிடுகிறார் பன்வார்சிங்கின் கைக்கூலியான இன்ஸ்பெக்டர். கோபம் கொள்ளும் பன்வார்சிங், பான்சிங் குடும்பத்தை ஊரைவிட்டே அடித்து விரட்டுவதோடு, அவனது அம்மாவையும் அடித்துக் கொன்றுவிடுகிறான். கொதித்து எழுகிறான் பான்சிங். தேசத்துக்காக தான் பாடுபட்டது, மெடல் வாங்கியது அனைத்தும் வீண், தேசம் தனக்காக எதுவும் செய்யாது என்ற விரக்தி ஏற்படுகிறது. துப்பாக்கி தூக்குகிறான். ஆட்களை சேர்த்துக்கொண்டு சம்பல் பள்ளத்தாக்கில் பதுங்குகிறான். கொள்ளை அடிப்பது, ஆள் கடத்துவது என்று பணத்துக்காக அதிரடி வேலைகள். அவனுக்கு உறுதுணையாக இருக்கிறது பொலிஸ் சீருடைகளும் வண்டிகளும் இராணுவ அனுபவமும். பன்வார் சிங்கையும் அவனது அடியாட்களையும் போட்டுத்தள்ளுகிறான். மூன்று மாநிலங்கள் கடந்துபோய் தேர்தலில் நிற்கும் ஒரு அரசியல்வாதியை காசுக்காக கடத்தி வருகிறான். கூடியவிரைவில் பிரபலமாகி விடுகிறான் பான்சிங்.

அரசாங்கம் விழித்துக்கொண்டு அவனை 'கொள்ளைக்காரன்' என்று பட்டம் கட்டி தேட ஆரம்பிக்கிறது. அவன் தன்னை 'போராளி' என்று சொல்லிக் கொள்கிறான். "என்னைப் பொறுத்தவரை கொள்ளைக்காரர்கள் என்பவர்கள் நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள்" என்கிறான் நறுக்கென்று. அவனைச் சந்திக்கும் அவனது மேலதிகாரியும் கோச்சும் அவனை அரசாங்கத்திடம் சரண் அடையச் சொல்லி வற்புறுத்துகிறார்கள். "நாட்டுக்காக தங்கப்பதக்கம் வாங்கியபோது யாருக்கும் பான்சிங் யார் என்று தெரியவில்லை. ஒரு அயோக்கியனை கடத்தியவுடன் நாட்டுக்கே என் பெயர் தெரிந்துவிட்டது. நாட்டுக்காக தேய்ந்து மெலிந்து நசிந்துபோவதுதான் ஒரு விளையாட்டு வீரனின் தலைவிதியா? இதற்கு ஒரு முடிவே இல்லையா? தேசத்துக்காக நான் நிறைய செய்துவிட்டேன். தேசம் ஏன் எனக்கு எதுவுமே செய்ய மாட்டேன் என்கிறது?" என்று அவர்களிடம் கொதிக்கிறான் பான்சிங். சரணடைய மறுக்கிறான்.

குடும்பம் பிரிந்துவிட, மகன் இராணுவத்துக்குச் சென்றுவிட, திசைமாறிய தன் வாழ்க்கைக்கு விடை தேடிப் போராடுகிறான் பான்சிங். ஒரு கொள்ளைச் சம்பவத்துக்கு திட்டமிட்டு ஒரு கிராமத்தில் தங்க, அவர்களுக்கு அடைக்கலம் தரும் கிராமநிர்வாகி பொலிஸுக்கு உளவு சொல்ல, அவர்கள் கிராமத்தையே சுற்றி வளைக்க, அந்த தாக்குதலில் பான்சிங்கின் அண்ணன் கொல்லப்படுகிறான். அதற்கு பதிலடி தர, கிராமத்தில் நுழைந்து கிராம நிர்வாகியையும் அவரோடு சம்பந்தப்பட்ட எட்டுப் பேரையும் சுட்டுக்கொல்கிறான் பான்சிங். பிரச்சினை பெரிதாக, ஒருமாதம் அனைவரும் பிரிந்து தலைமறைவாக இருப்பது என்றும் ஒருமாதம் கழித்து ஓரிடத்தில் கூடுவது என்றும் முடிவு செய்கிறார்கள். பான்சிங் தன் குடும்பத்தினரை கடைசிமுறையாக போய்ச் சந்திக்கிறான். இராணுவப் பகுதிக்குச் சென்று மகனையும் சந்திக்கிறான். தன் பழைய வாழ்க்கைக்கு அவனது கண்களும் நெஞ்சும் ஏங்குகிறது.

மறுபடி ஒருமாதம் கழித்து, பான்சிங்கின் கூட்டம்



கூடும்போது, பான்சிங்கின் வலதுகை ஆள், பொலிஸ் உளவாளியாக மாறி இருக்கிறான். ஒரு கல்யாண வீட்டை கொள்ளையடிக்கலாம், நிறைய பணம் கிடைக்கும் என்று பொய்சொல்லி பான்சிங்கையும் மற்றவர்களையும் ஒரு கிராமத்துக்கு அழைத்து வந்து சேர்க்கிறான். பொலிஸுக்கும் தகவல் சொல்கிறான். பொலிஸ் வந்து தாக்கும் நேரம், துப்பாக்கி ரவைகள் அடங்கிய பையுடன் ஓடிவிடுகிறான். பொலிஸ் தாக்க, திருப்பித் தாக்கமுடியாத நிலை. பொலிஸ் அவர்களது கும்பலை வேட்டையாடி அனைவரையும் சுட்டுக் கொல்கிறது. அந்த துப்பாக்கிச் சண்டையில் பான்சிங் தோமரும் சுட்டுக் கொல்லப்படுகிறான். வருடம் 1981. ஸ்லம்டாக் மில்லியனரில் பொலிஸ் அதிகாரியாக வந்து அலப்பறை பண்ணிய இர்ர்.'.பான்கான், தனது மிகைப்படுத்தாத நேர்த்தியான நடிப்பினால் பான்சிங் தோமர் என்ற பாத்திரத்தில் பரிணமிக்கிறார். முழுப் படமும் தாங்குவது இந்த ஒரே ஒரு பாத்திரம்தான். ஆனால் பார்க்க அலுக்கவில்லை என்றால் அது இர்ர் பான்கானின் நடிப்பு மகிமை. நாட்டுக்காக தங்களை அர்ப்பணிக்கும் விளையாட்டு வீரர்களின் வாழ்க்கையை, அரசாங்கம் எவ்வளவு விளையாட்டாக எடுத்துக்கொள்கிறது என்பதற்கு, பான்சிங் தோமர் ஒரு சாட்சி. மத்திய பிரதேசத்தில் நடந்த கதை, நமது மத்திய பிரதேசத்தையும் தொடுகிறது, ஆழமாக. □

## – காங்கேசன்துறை பகுதியில் –
# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 65 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மற்றும் காங்கேசன் துறை பொலிஸ்பிரிவுகளில் பல் வேறு குற்றச்செயல்களின் நிமித் தம் நீதிமன்றத்தினால் பிடி யாணை பிறப்பிக்கப்பட்ட 65 பேர் கடந்வாரமும் பொலிசாரி னால் கைது செய்யப்பட்டிருப்ப தாக யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் சிறிகுகநேசன் தெரி வித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நகரில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற வாரந்த செய்தியாளர் சந்திப்பி லேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.


இத்தக் காலப்பகுதியில் யாழ். பொலிஸ் பிரிவில் 28 பேரும் காங்கேசன் துறைப் பொலிஸ் பிரிவில் 37 பேருமாக இந்த 65 பேரும் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இதேவேளை கடந்த வாரத் தில் சட்டவிரோதமதுவிற்பனைக் காக 12 பேரும், கஞ்சாவிற்பனை செய்ததற்காக ஐந்து பேரும், குடி போதையில் வாகனம் செலுத் தியது சம்பந்தமாக 52 பேரும் கைது செய்யப்பட்டதுடன் குப்பை கூழங்களை வீதியில் கொட்டி சூழலிற்கு பங்கம் விளைவித்த தற்காக 07 பேரும் கைது செய் யப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாகவும் சிறி குகநேசன் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மாவட் டத்தில் பொலிஸ் பிரிவுகள் தோறும் பொலிஸ் நடமாடும் சேவை கள் நடாத்தப்பட்டுவருவதாக வும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் மானிப்பாய், ஊர்காவற்துறைப்பொலிஸ் பிரி வுகளிலும் இளவாலை தெல்லிப பளை, அச்சுவேலி, பருத்தித் துறை ஆகிய பொலிஸ் பிரிவு களிலும் நடைபெற்றிருப்பதாக வும் குறிப்பிட்ட சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் நேற்றையதினம் கொடிகாமம் பொலிஸ் பிரிவில் எழுதுமட்டுவாள் பிரதேசத்திற் கான பொலிஸ் நடமாடும் சேவை ஒன்று நடைபெற்றதாக வும் தெரிவித்தார். (பா)

## தையல் இயந்திரம் வழங்கல்



பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள குடும்பத் தலைவிக்கு ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் குணசிங்கம் (வசந்தன்) தையல் இயந்திரத்தை வழங்கி வைத்தார். பொருளாதார ரீதியல் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பத்தலைவிக்கே தையல் இயந்திரம் ஈ.பி.டிபியின் யாழ்.அலுவலகத்தில் வைத்து கையளிக் கப்பட்டது.இதன் போது ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் உடனிருந்தார்.

# நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றம் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் தமது நிதி மூலம் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக்கென ஒதுக்கியுள்ளனர். இதன்படி-நெடுந்தீவு சீக்கிரியாம்பிள்ளை அ.த.க. பாடசாலைக்கு பாண்டு வாத்தியக் கொள்ளவன வுக்கென 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரிக்கு பாண்ட் வாத்தியக்கொள்வனவுக்கென 1இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயத்திற்கு சுற்றுமதில் அமைத்தலுக்கு 1இலட்சம் ரூபாவும், நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு நுழைவாயில் பெயர் வளைவு அமைப்பதற்கு 30 ஆயிரம் ரூபாவும், நெடுந்தீவு 6ஆம் வட்டாரத்தில் பஸ் தரிப்பிடத் திற்கு 1 இலட்சத்து 25ஆயிரம் ரூபாவும், சென் அன்ரனீஸ் சனசமூக நிலைய நிலாஜோதி நாடக மன்றத்தின் புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், தூண்காலை 5அம் வட்டாரத்தில் குடிநீர் தொட்டி (2) அமைத்தலுக்கு 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், நலன்புரிக்கழகத்திற்கு (பிரதேசசெய லகம்) மகாநாட்டு மண்டப ஒலிபெருக்கித் தொகுதி கொள்வனவுக்கு 1இலட்சம் ரூபாவும், கடற் தொழிலாளர் சங்கத்திற்கு நீர்த்தாங்கி இணைப்பு புனரமைப்புக்கு 30 ஆயிரம் ரூபாவும் ஒதுக் கியுள்ளனர்.

# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் இளைஞன் மீது சட்ட நடவடிக்கை

(திருநெல்வேலி)

பத்து வயது சிறுமியை பாலியல் வன்பு ணர்வுக்கு உட்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கு கடந்த வாரம் யாழ்.மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜெ.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத் துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் புங்குடு தீவை சேர்ந்த கந்தசாமி பிரபாகரன் என்பவர் அதே இடத்தை சேர்ந்த பத்து வயது சிறுமியொருவரைப் பாலியல் வல்லுற வுக்குட்படுத்தியதாக ஊர்காவற்துறைப் பொலி ஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டு ஊர்காவற்துறை நீதிம்ன்றத்தில் வழங்குத் தாக்கல் செய்திருந்தனர். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுப்பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றத்துக்குக்குப் பாரப்படுத்தப்பட்டது. ஆறு வருடங்களுக்கு முன்னர் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. அப்போது பத்து வயது சிறுமியாக இருந்த வேளை, அண்மையில் உள்ள வீட்டில் இருந்த எதிரியின் பிள்ளைகளோடு விளையாடு வதற்காக அவரது வீட்டுக்கு சென்றபோது எதிரி இக்குற்றத்தைப் புரிந்ததாக பொலிஸில்முறைப் பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணையின் பின்னர், எதிரியை தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பி ணையில் செல்வதற்கு நீதிபதி உத்தரவிட்டார். எதிரியின் சார்பில் சட்டத்தரணிகள் மு. திருநாவுக் கரசு மு.றெமிடியஸ் தி. கணதீபன் ஆகியோரும், அரச தரப்பில் அரச சட்டவாதி நளினி கந்த சாமியும் ஆஜராகினர். (137)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

எமது நிறுவனத்தின் சாவகச்சேரி, நெல்லியடிக்கிளைகளில் Computer Lecturer/Instructors மற்றும் office Helper பதவிகளுக்கு பொருத்தமான தகைமையுடைய அனுபவமுள்ள வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தகுந்த அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும் ஏழு நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும் மேலதிகவிபரங்களுக்கு Gateway Center For ICT Education இல 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. தொ.பே.இல் 021 226 2395 பக்ஸ்: 021 226 2789.

---

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு போத் தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் செய்யும் நிறுவனத்திற்கு விநியோகஸ்தர்கள் தேவை. 20 லீற்றர் போத்தல் மற்றும் ஏனைய பொதிகளும் உண்டு ஆர்வம் உள்ள வர்கள் மட்ம் தொடர்ப கொள்ளவும். தொடர்பகளுக்கு: 077 791 4272, 075 853 2451.

---

யாழ். நகரின் மாநகர சபைக் குட்பட்ட வீதிகளைப் புனர மைக்கும் கம்பனிக்கு வேலையாட்கள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி வி.வி. கருணாரட்ன அன் கொம் பனி, இல 12ஏ, கோவில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல.071 171 2003.

---

எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள விற்பனைப் பிரதி நிதி உடனடியாகத் தேவை. மாதாந்தம் 35,000 ரூபா தொடக்கம் 40,000 ரூபா வரை சம்பாதிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் காலை 7. 00 மணி தொடக்கம் காலை 8.00 மணிவரை சான்றிதழ் களுடன் நேரில் சமூகமளிக்கவும் தொடர்புகளுக்கு: 077 442 2098.

---

யாழ். கல்வியங்காட்டில் இயங்கும் கல்வி நிறுவனம் ஒன் றிற்கு பெண் பணியாளர் ஒருவர் தேவை: தொடர்புகளுக்கு 077 283 2968.

---

யாழ்ப்பாணத்தில் உள்ள கோல்டன் இராசையா மோட் டோர்ஸ் கடைக்கு பெண் விற்பனையாளர் தேவை. தொடர்பு களுக்கு: 077 614 1928.

---

தச்சு வேலை தெரிந்தவர்கள் தேவை. கோப்பாய் பகுதிக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு 077 961 5090.

---

எமது நிறுவனத்தின் கட்டுமான வேலைத்திட்டங்களில் பணி புரிய பார இயந்திர இயக்குநர்கள் (JCB, Excavatot, Road Roller, Skid Loaders Operators) உடனடியாகத் தேவைப் படுகின்றார்கள். தகுதியுள்ளவர்கள் ETM கரந்தன் வீதி ஊரெழு எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். தொ.பே.இல.021 321 5377.

---

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளராக கொழும்பில் தங்கி இருந்து வேலை செய்வதற்கும், யாழ்ப்பாணக்கிளைக் கும் ஆட்கள் தேவை. (கொழும்பில தங்குமிட வசதி செய்து கொடுககப்படும்) தொடர்புகளுக்கு 11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம், தொ.பே. இல. 077 820 8085.

---

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட் டுள்ள இரண்டு நிலையங்களில் சந்தை ஆராய்ச்சி துறையில் மேற்கொள்ளப்படும் பாரிய வேலைத்திட்டத்திங்களில் பல வெற்றிடங்கள் உள்ளன. நிரந்தர பதவிகளாக 'கள நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட மேற்பார்வையாளர்கள், ஒப்பந்த அடிப்படையிலான பதவிகளாக களஆய்வாளர்கள்' மற்றும் கள ஆய்வு வேலைகளை கையாளும் சிறிய, பெரிய குழுக் கள்' கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும் விண்ணப்பிப்போர் தங்கள் விண்ணபத்தினை Field Manager, No 69/A, Maya Avenue Colombo- 06 விலாசிதாகட்டத்துக்கு எதிரில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும், கடித உறையின் மேல் மூலை யில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும், மின் னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் விடயதலைப்பில் விண்ணப் பிக்கும் பதவியைக்குறிப்பிடவும், விண்ணப்ப முடிவுத்திகதி: 12.10.2012 ஆகும். மேலதிக விபரங்களுக்கு 011 523 5782 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

---

லைடன் புடைவை நிலையத்தில் வேலை செய்வதற்கு இரண்டு பெண்பிள்ளைகள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத் தக்கது. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு லைடன் புடைவை நிலையம், இல 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

கொழும்பில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றுக்கு சமையல் உதவியாட்கள் தேவை. தொடர்புகளுக்கு 077 731 6100.

---

கொழும்பு வத்தளையில் அமைந்துள்ள பிரபல ஆடைத் தொழிற்சாலையொன்றிற்கு 40 வயதுக்கு மேற்பட்ட அனுபவம் வாய்ந்த கணக்காளர் ஒருவர் அவசரமாகத் தேவை. இருபாலா ரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு 077 726 5527, 077 755 1412.

# அடம்பிடிக்கும் கூட்டமைப்பு மீது இந்தியா அழுத்தம் கொடுக்கும்

## மாறுகிறது சுருதி

(கொழும்பு)

இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் அடம்பிடிக்கும் போக்கைக் கைவிட்டு விட்டுக்கொடுப்புடன் இணங்கிப்போகும் பண்புடன் செயற்படுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை. இந்திய அரசு வற்புறுத்தவுள்ளது.

இந்தியாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து இந்தியா இந்த நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன் அடிப்படையில் இந்தியாவுக்கு விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைக்கப்படலாம் அல்லது இந்தியத் தரப்பினர் இலங்கையில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்திக்கலாம் என்று எதிர்பாாக்கப்படுகிறது.


இதன்போது இலங்கையின் ஜனாதிபதியினால் கூட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கேற்குமாறு இந்தியா, கூட்ட்மைப்பைக் கேட்கக்கூடும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, இந்திய பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் புதுடில்லியில் சந்தித்தபோது இரண்டு நாடுகளுக்கு இடையிலும் பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்திக் கொள்ள இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் போது தமிழகத்தில் இலங்கைப் படையினருக்கு எதிராக இடம் பெற்ற சம்பவங்கள் தனிப்பட்ட சம்பவங்கள் என்று இந்திய தரப்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.



நேற்றுமுன்தினம் ஆரம்பமான மழலைகளின் கண்காட்சி இரண்டு தினங்களாக யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இக்கண்காட்சிக்கு வருகை தந்த சிறப்பு விருந்தினரை ரோபோ வேடமிட்ட மழலை ஒருவர் மாலை அணிவித்து வரவேற்பதையும், விருந்தினர்கள் மழலைகளின் கைவண்ணங்களைப் பார்வையிடுவதையும் காணலாம். ஆர்.ராஜகுமார்

# வல்லிபுரத்தில் அமர்ந்த கண்ணா



வற்றாத வங்கக்கடல் ஓரத்தில் - வல்லிபுரம்
பற்றியே அமர்ந்த மாயக்கண்ணா
சுற்றி வலம் வரும் அடியார் - குறைகளை
சற்று கேட்டு விளங்காயோ
நேர்த்திக்கடன் வைத்தருள்வாயென்றே - உன்னிடம்
நாற்திசையிலும் இருந்து வருகிறோம் ஐயா - கண்ணா
கோவிந்தா! கோபாலா! காத்திடுவாய்.

-கே.கே.விசிந்தன்-
பொலிகண்டி.

# நாகதம்பிரானுக்கு கொடியேற்றம் புதிய பாய்க்கப்பல் கையளிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் உள்ள நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

சுமார் பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர் இந்த ஆண்டு இவ் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

இன்றைய கொடியேற்ற உற்சவத்தின் போது புதிதாக வடிவமைக்கப்பட்ட பாய்க்கப்பல் ஒன்று இந்த ஆலயத்துக்கு வழங்கப்பட விருக்கிறது. அமரர்களான தாமோதரம்பிள்ளை வள்ளியம்மை குடும்பத்தினர் இதனை இன்று கையளிக்கின்றனர். ஆறுமுகம் பழனிவேல் குழுவினர் இக்கப்பலை வடிவமைத்துள்ளனர். (01)

# இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த அரசசார்பற்ற நிறுவனங்கள் முயற்சி

## சிங்கள நாளிதழ் தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் சர்வதேச அளவில் செயற்படும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இறங்கியுள்ளதாக சிங்கள நாளேடு தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை இலக்கு வைத்து 32 அரச சார்பற்ற நிறுவனங்கள், இலங்கைக்கு எதிராக இரகசிய அறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வன்னிப் போரைத் தடுத்து நிறுத்த ஆர்வம் காட்டிய சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இதில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டிருந்தன.

இரகசிய அறிக்கையை அனுப்பி வைத்த தரப்பினர் யார் என்பதனை புலனாய்வுப் பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர்.

இலங்கையில் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவதாகத் தெரிவித்து இரகசிய அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என திவயின செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இடியுடன் மழைபொழியும் வானிலை நிலையம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் தினங்களில் நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் கடும் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக இந்தநிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பொது மக்கள் இடி மின்னல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு காலநிலை அவதான நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காற்றின் வேகமும் அதிகரித்துக் காணப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிற்றூர்திகள் சமாந்தரப்பயணம்; பயணிகள் அல்லோலகல்லோலம்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியில் இரு சிற்றூர்திகள் போட்டி போட்டு ஓடியதன் வேகம் கண்டு, அதில் பயணித்த பயணிகள் பலரும் அச்சமும் கிலேசமும் அடைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

நேற்றுக்காலை கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட இரு சிற்றூர்திகள் கைதடிக்கு அப்பால் ஒன்றை ஒன்று முந்துவதற்காக போட்டி போட்டு ஓடியபோது, அதில் பயணம் செய்த பலரும் அச்சத்துடன் காணப்பட்டனர்.

பயணிகளின் இந்த அச்ச நிலையைக் கருத்தில் கொள்ளாத சிற்றூர்திகள் இரண்டும் வஸ்தியன் சந்தியிலிருந்து சாள்ஸ் சந்திவரையும் சமாந்தரமாகவும் பயணித்துச் சென்றுள்ளன.

இதேவேளை செம்மணி - பில்தெபியா தேவசபை சந்தியிலிருந்து அரியாலை வரையுமுள்ள வீதி புனரமைக்கப்பட்டுக் கொண்டிருப்பதால், இடையில் குறிப்பிட்ட தூரமான பகுதி ஒரு வழிப்பாதையாக பாவிக்கப்படும் நிலையில் இச்சிற்றூர்திகள் இரண்டும் போட்டி போட்டு ஓடியமை குறிப்பிடத்தக்கது. (138)

# தமிழ் இலக்கிய விழா அடுத்த மாத இறுதியில்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, பண்பாட்டுத் திணைக்களம் வருடாந்தம் நடத்தும் தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 26, 27ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

காலை மாலை இரு அமர்வுகளாக நடைபெற உள்ள நிகழ்வில் காலை ஆய்வரங்கமும், மாலை கலை நிகழ்வுகளும் இடம் பெறும். ஆய்வரங்கத்துக்கான கருப்பொருளாக "வடமாகாண இலக்கியத்தின் செல்நெறிகள்" எனும் பொருள் தெரிவுசெய்யப்படுள்ளது. இப்பொருளில் இருபது ஆய்வாளர்கள் ஆய்வுகளைச் சமர்ப்பிக்க உள்ளனர். இவ்வாண்டே முதன் முதலாக ஒரே இடத்தில் இரண்டு அரங்குகள் என ஒரே நேரத்தில் ஆய்வரங்கு இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வின் போது, சிறந்த இலக்கியத்திற்கான விருது, கௌரவ ஆளுனர் விருது என்பனவும் வழங்கப்பட உள்ளன.

வடக்கின் கலைப்படைப்பை வெளிப்படுத்தும் வகையில் கிராமிய கலைகள், தமிழுக்கும் இலக்கியத்திற்கும் பெருமை சேர்த்த புலவர்கள், தமிழ் இன்னியம் போன்றவை அடங்கிய ஊர்வலம் 27ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு இடம் பெற உள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாணத்தின் ஐந்து மாவட் டங்களிலிருந்தும் இலக்கிய காததாக்கள், ஆய்வாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் என துறை சார்ந்த பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்வுகள் தொடர்பான கூட்டம் அண்மையில் யாழ் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் அவரது பணிமனையில் நடைபெற்றது. (54)

43. 50 சதத்தை ரூபாயின் தசமமாகக் கூறின்

1. 0.50 2. 0.050 3. 1.50

44. இடைவெளிக்குரிய இலக்கத்தைக் காண்க.

அவன் என்றால் .................................... 136

இவன் என்றால் .................................... 336


எவன் என்றால் .................................... ............

1. 536 2. 756 3. 736

45. 3 ஆம் வகுப்பு சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தத் தொகை ரூ.9000.00 எனில், விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கையைக் காண்க. ..............................

46. சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தப் பணத்தைக் காண்க..............................

**தரம் 4 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் காலை உணவின் விபரம் வரைபில் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**




47. மிகக் கூடுதலானோர் விரும்பும் உணவு வகை யாது?

..............................

48. மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவு வகை யாது?

..............................

49. அதிகமானோர் விரும்பும் உணவுக்கும் மிகக்குறைந்தளவானோர் உண்ட உணவுக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ..............................

50. இடியப்பம் உண்ட மாணவர்கள் எத்தனை பேர்?

..............................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I

# கல்வி முரசு

.30 மணி



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமானதன் கீழ் கோடிடுக.**

1. கைத்துடைப்பானைப் பாவித்தல்
   சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவுதல்
   உபகரணங்களைச் சுத்தமாக வைத்திருத்தல்
   } (சமைத்தல் / விற்றல்)

2. முட்டையிடும்
   ரீங்காரமிடும்
   சூழலுக்கு ஏற்ப இயங்கும்
   } (பறவை / எலி)

3. வளரும்
   வளையும்
   நிழல் தரும்
   } (மரம் / கொடி)

**பின்வரும் ஆங்கிலப் பதங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை இணைக்கவும்.**

| | |
|---|---|
| 4. Good Moring | நேர்முகப் பரீட்சைகளின்போது |
| 5. Happy Birthday | புதுவருடப் பிறப்பின்போது |
| 6. Good Luck | காலை வேளையில் |
| 7. Happy New year | பிறந்தநாள் நினைவூட்டலின்போது |

**8- 12 ஆகிய வினாக்களில் ஒரு சொல் வித்தியாசமானது. அதன் கீழ்க் கோடிடுக.**

8. உண்ணும் , பிடிக்கும் , ஆறும்

9. அடைதல் , ஓடுதல் , வருதல்

10. கொடுத்தல் , பெறல் , விருத்தி

11. கூறுதல் , பாடுதல் , பேசுதல்

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

12. சகல மனிதர்களுக்கும் நீர் அவசியம். எனினும் நகர வாசிகள் கிணற்று நீரை அருந்த மாட்டார்கள்.

1. நகர வாசிகள் நீரை அருந்தமாட்டார்கள்
2. நகர வாசிகளுக்கு கிணற்று நீர் கிடைக்காது
3. நகர வாசிகள் கிணற்று நீரை அறியமாட்டார்கள்

13. பழச்சாறு போத்தல் ஒன்றில் 750 ml பானம் உள்ளது. விருந்துபசாரம் ஒன்றில் அவ்வாறான 10 போத்தல்கள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப்பட்ட மொத்த பானத்தின் அளவு.

இரும்பினால் செய்யப்பட்ட கூட்டில் நான் தனியாக இருக்கிறேன். உணவும் வேறு தேவைகளும் எனக்குத் தாராளமாகக் கிடைத்தாலும், மனதில் நிம்மதி இல்லை. என்னை நன்கு கவனித்தாலும் தனிமையில் கழிக்கும் இவ்வாழ்க்கையில் என்ன நன்மை. சில வேளைகளில் என்னை அறியாமலேயே பறந்து செல்ல முயற்சி செய்கிறேன்.

14. மேற்கூறிய பந்திக்கிணங்க கூட்டில் அடைக்கப்பட்டிருப்பது,
 1. குற்றவாளி ஒருவன் 2. பறவை ஒன்று 3. நாய் ஒன்று

15. பறந்து செல்லத் தேவையானது,
 1. சிறகு 2. இறகு 3. கூடு

16. பின்வருவனவற்றுள் முலையூட்டி ஒன்று.
 1. கழுகு 2. பூனை 3. முதலை

17. நன்மை என்பதற்குரிய எதிர்ச்சொல்
 1. நன்கு 2. நன்று 3. தீமை

18. பந்தியில் உள்ள உலோகப் பொருள்
 1. இரும்பு 2. உணவு 3. நிம்மதி

19. மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.............................................................................................

20. மொத்தம் எத்தனை பழங்கள் பறிக்கப்பட்டன?

.............................................................................................

21. 3 பங்குகளாக்கப்பட்ட பின் ஒரு பங்கில் உள்ள பழங்களின் எண்ணிக்கை யாது?

.............................................................................................


22. ஒரு பங்கிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.............................................................................................

23. ஒரு பங்கிலுள்ள ஜம்புப்பழங்களின் எண்ணிக்கை யாது?

.............................................................................................

24. தரப்பட்டுள்ள படத்தில் உள்ள கோலத்தைக் கவனித்து இடைவெளிக்குரிய எண்ணைக் காண்க.




I) 45 ii) 39 iii) 40

. தரப்பட்ட சிங்கள வசனங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

25. ஸ்துதிய .............................................................................

26. ஆயுபோவன் .............................................................................



**பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கொழும்பு நகரம் பெரிய நகரம் - கோல அழகு கொண்ட நகரம்
மாடி மனைகள் நிறைந்த நகரம் - மக்கள் பலரும் விரும்பும் நகரம்

காலிமுகக் கடற்கரையும் - கவின் மிகு பல கட்டடங்களும்
தூர நின்று நாம் பார்த்திடவே - துலங்கும் பெரிய துறைமுகமும்

விரிந்த பரந்த வீதிகளும் எழில் - விளங்கும் கோயில் பள்ளி பலவும்
நிறைந்த நகரம் கொழும்பு நகரம் நிகரில்லாத பெரிய நகரம்

இந்து சமுத்திர ஓரத்திலே - மிக இனிதாய் அமைந்த ஒரு நகரம்
வந்து பலரும் பார்த்திடவே - வாஞ்சை கொள்ளும் பெரு நகரம்

27 இப்பாடல் எதைப்பற்றிக் கூறுகின்றது?

.............................................................................................

28. இப்பாடலில் வரும் கடற்கரையின் பெயர் என்ன?

.............................................................................................

29. இப்பாடலில் வரும் சமுத்திரத்தின் பெயர் என்ன?

.............................................................................................

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்கள் தருக.**

30. பெரிய .............................................

31. நகரம் .............................................

32. தூர .............................................

33. பரந்த .............................................

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.**

34. அழகு .............................................

35. முகம் .............................................

36. வீதி .............................................

37. வாஞ்சை .............................................

38. கோயில் .............................................

39. பெரிய .............................................

40. கொழும்பு நகரம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?

.............................................................................................

41. இப்பாடலில் வரும் பெயர்ச் சொற்கள் மூன்று எழுதுக.

1)........................ 2)........................ 3)........................

42. இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ள நாட்டின் பெயர் தருக.

.............................................................................................

# ஜனநாயகம் தழைப்பதற்கு மக்களின் பங்களிப்பு அவசியம்

## - தேர்தல் ஆணையாளர் சம்பத் தெரிவிப்பு -

(புதுடில்லி)


ஜனநாயகம் த்ழைக்க வேண்டுமானால், அனைத்து தரப்பு மக்களும் தேர்தலில் பங்கேற்று, தங்களின் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என தலைமை தேர்தல் ஆணையர் சம்பத் தெரிவித்தள்ளார்.

தேர்தலில் வாக்காளர் அதிக அளவில் பங்கேற்பதன் அவசியத்தை வலியுறுத்துவது குறித்த பயிற்சியரங்கம் டில்லியில் நடந்தது. இதில் த்லைமை தேர்தல் ஆணையர் வி.எஸ். சம்பத் பேசுகையில்; போதிய அளவு மக்களின் பங்களிப்பு இல்லாத எந்த ஜனநாயக அமைப்பும் நீண்ட காலத்துக்கு நீடிக்க முடியாது. ஜனநாயகம் தழைக்க வேண்டுமெனில், அனைத்து தரப்பு மக்களும், தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்று, வாக்களிக்க வேண்டும். 2009இல் நடந்த லோக்சபா தேர்தலில், 28 கோடி வாக்காளர்கள், வாக்களிக்கவில்லை. இது மிகவும் கவலை அளிக்கும் விஷயம். வாக்குச் சீட்டுகள் மூலம் வாக்காளர்கள் தங்கள் தீர்ப்பை அளிக்க வேண்டும் என்பது தான் எங்களின் விருப்பம். அனைத்து தரப்பு மக்களையும், தேர்தலில் பங்கேற்க வைப்பதற்காக ஸ்ரீ தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வாக்களிக்காதவர்கள் யார் என்பதை, அடையாளம் கண்டு, அவர்களை ஜனநாயகக் கடமை ஆற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறோம். குஜராத், இமாச்சல் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும். இதற்கான அறிவிப்பு, குறித்த காலத்தில் வெளியாகும். தேர்தல் திகதியை வெளியிடுவதற்கு முன், பண்டிகைக் காலம் இயற்கைச் சீற்றங்கள், பருவ நிலை மாற்றம் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்வோம் என்றார்.




# இந்திய இராணுவ இரகசியங்கள் பாகிஸ்தானுக்கு கடத்தல்

(புதுடில்லி)



இந்தியாவின் இராணுவ இரகசியங்களை மின்னஞ்சல் வழியாக பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. அதிகாரிகளுக்கு அனுப்பியதாக கைது செய்யப்பட்ட தமீம் அன்சாரி விசாரணையில் தெரிவித்துள்ளார்.


தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் கடந்த 18ஆம் திகதி தென்னிந்தியாவில் அமைந்துள்ள இராணுவ இரகசியங்களை இலங்கைக்குக் கொண்டு வரப் புறப்பட்டபோது க்யூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தற்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இவரிடம் பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

அப்போது தன் பெயரில் வெவ்வேறு இணையத் தள நிறுவனங்களில் 9 மின்னஞ்சல் முகவரிகள் இருந்ததாகவும் அதன் மூலம் இந்திய இராணுவ இரகசியங்களை பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. அதிகாரிகளுக்கு பகிர்ந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் 20இற்கும் மேற்பட்ட இந்திய இராணுவ இரகசியங்களின் படங்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.

மேலும் சிலவற்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பிய பின்னர் தமீம் அழித்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.





# அசாமில் மீண்டும் வெள்ளப் பெருக்கு 25 பேர் உயிரிழப்பு; 7 இலட்சம் பேர் பாதிப்பு

(கவுகாத்தி)

அசாம் மாநிலத்தில் 4 ஆவது முறையாக பருவமழை பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏறக்குறைய 10 .இற்கும் மேற்பட்ட மாவட்டங்கள் இந்த மழையினால் கடும் பாதிப்பில் மூழ்கியிருக்கிறன. மொத்தம் 7 இலட்சம் பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் நாசமடைந்திருக்கின்றன.

இதேவேளை சிக்கிமில் என்ற இடத்தில் பெய்த மழை மற்றும் வெள்ளத்திற்கு 25 பேர் பலியாகியிருக்கின்றனர். பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு சில்ர் உயிருக்குப் போராடி வருகின்றனர். மழை பெய்த பகுதிகளில் மீட்பு நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜுலை மாதத்தில் பெய்த கனமழைக்கு 80 பேர் அசாமில் உயிரிழந்தனர். தற்போது மீண்டும் இந்த மழை இப்பகுதி மக்களுக்கு



பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. முழு விவரம் இன்னமும் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை.

# ஐ.நாவில் ஐஸ்வர்யா ராய்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் செப்ரெம்பர் 21ஆம் திகதியை உலக அமைதி தினமாக கொண்டாடி வருகிறது.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் உலக அமைதி தினம் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன், உலக அமைதிக்கான ஐ.நா. தூதர் ஹொலிவுட் நடிகர் மைக்கேல் டக்ளஸ், இங்கிலாந்து மானுடவியல் அறிஞர் ஜேன் குட்டால், அமெரிக்க எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவருமான இலி வீசெல், அமெரிக்க நடிகையும் பாடகியுமான மோனிக் கோல்மேன் கலந்து கொண்டனர்.

மேலும் முன்னாள் உலக அழகியும் நடிகையுமான ஐஸ்வர்யாராய் இந்த ஆண்டு நடந்த உலக அமைதி தினத்தில் பங்கேற்றது சிறப்பம்சமாகக் கருதப்படுகிறது.



இது குறித்து அவர் கூறுகையில், இந்நிகழ்ச்சியில் பங்கேற்றது எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன்.

உலக அமைதிக்காக உதவ வேண்டும் என்ற நோக்கத்துக்காக நாங்கள் எல்லோரும் இங்கு கூடியிருக்கிறோம் என்றார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ................................................

முகவரி : ................................................

பிறந்த ஆண்டு : ................................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பத்மநாபசாமி பொக்கிஷங்கள் மதிப்பிடும் பணி மீண்டும் ஆரம்பம்

(திருவனந்தபுரம்)


கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாபசாமி கோவிலில் பொக்கிஷங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பொக்கிஷங்களை மதிப்பிட்டு அறிக்கை தரும்படி உச்ச நீதிமன்றம், தான் அமைத்த மதிப்பீட்டு குழுவிற்கு உத்தரவிட்டது.

A,B,C,D,E,F என்ற 6 அறைகளில் உள்ள பொக்கிஷங்களை மதிப்பிடும் பணி தொடங்கி, இதில் C,D,E,F நான்கு அறைகளின் பொக்கிஷங்கள் மதிப்பிடப்பட்டுவிட்டது.

சமீபத்தில் A அறையின் பொக்கிஷங்கள் மதிப்பிடும் பணியில் பெண் அதிகாரிகள் அமர்த்தப்பட்டபோது கோவில் பூசாரிகள், நிர்வாகிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தமையால் பணி நிறுத்தப்பட்டது.

எனவே மீண்டும் மதிப்பிடும் பணி தொடங்குவது குறித்து மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் எம்.நாயர் கோவில் நிர்வாகிகளுடன் ஆலோசித்தார்.



அப்போது பொக்கிஷங்களை பெண்அதிகாரிகள் அறைக்கு வெளியில் வைத்து மதிப்பிடுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கு கோவில் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகள் ஒப்புக்கொண்டமையால் மதிப்பிடும் பணி மீண்டும் தொடங்கியுள்ளது.

## தலைவர்கள்...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்கு பெரும் மானிடத் துயரை ஏற்படுத்திய ஐ.தே.க. இடம் ஆதரவு தேடுவதும், புலிகளால் 48 மணித்தியாலத்தில் விரட்டி அடிக்கப்பட்ட இஸ்லாமிய சமூகத்திடம் ஆதரவு கேட்பதும், TNAக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் புரிந்துணர்வு இருப்பதாக கூறுவதும், என்னே ஒரு தார்மீகம், என்னே ஒரு தலைமைத்துவ இலட்சணம். உண்மையிலேயே சம்பந்தன் தலைமையிலான TNA இல் உள்ள 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மைத்தாமே பெரிய கண்ணாடியின் முன் நின்று சுயவிமர்சனம் செய்ய வேண்டும். தமிழ் சமூகத்தை ஆள்வதற்கு தமக்கு தகுதி இருக்கா எனவும் அத்துடன் 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற தலைவர்களா தாம் எனக் கேட்டு அரசியலிலிருந்தும், பொது வாழ்வில் இருந்தும் விலக வேண்டும். அப்போது தான் தமிழ் சமூகத்திற்கு புதுயுகம் பிறக்கும்.

# விமானத்தில் குடும்பச் சண்டை



விமானத்தில் கணவன், மனைவி மற்றும் குழந்தைகள் என 5 பேர் உரத்துச் சத்தம் போட்டதால் விமானம் அவசரமாகத் தரையிறக்கப் பட்டது.

இங்கிலாந்தின் கிளவ்லேண்ட் பகுதியில் ஹர்டில்புல் நகரை சேர்ந்த 39வயதான டேவிட் லாடன் என்பவருக்கு ஏற்கனவே திருமணமாகி 17 வயதுடைய டோரம் எனும் பெண்பிள்ளை உட்பட 2 மகன்கள் உள்ளனர்.

தற்போது சாரா வில்சன்(வயது- 28) என்பவருடன் இணைந்து வாழ்கிறார். இவர்களுக்கு குழந்தை ஒன்றும் பிறந்துள்ளது.

ஐந்து பேரும் ஸ்பெயினில் உள்ள சுற்றுலாத் தீவான லான்சரோட்டுக்கு விமானத்தில் சென்று கொண்டிருந்த போது, கணவன் மனைவிக்குள் வாக்குவாதம் முற்றியது.

அப்போது டேவிட்டுக்கு பிறந்த மகன்களும், சாரவிற்குப் பிறந்த மகனும் சேர்ந்து சண்டை போட்டுக் கொண்டதால் பயணிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

அவர்களைச் சமாதானப்படுத்த விமானப் பணிப்பெண்கள் முயற்சித்தும், இயலாமல் போனது. உடனே தகவல் அறிந்த விமானி போர்த்துகல் விமான நிலையத்தில் அவசரமாக விமானத்தைத் தரையிறக்கிய பின் வலுக்கட்டாயமாக 5 பேரையும் விமானத்தில் இருந்து வெளியேற்றினார்.

# மனநோயாளியின் தாக்குதலில் 3 முன்பள்ளி மாணவர்கள் பலி

(பிங்னான்)

சீனாவில் முன்பள்ளியின் வளாகத்திற்குள் புகுந்த மர்ம நபர் ஒருவர், குழந்தைகளைக் கொடூரமாக தாக்கியதில் மூன்று பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சீனாவின் தென் பகுதியில் வியட்னாம் எல்லையையொட்டி பிங்னான் என்ற நகரம் அமைந்துள்ளது.

இங்குள்ள முன்பள்ளி ஒன்றில் மதிய உணவு இடைவேளையின் போது குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது கோடாரியுடன் வந்த மர்ம நபர் திடீரென குழந்தைகளைத் தாக்கினார்.

இதில் 6 வயது முதல் 12 வயதுள்ள 3 குழந்தைகள் பரிதாபமாக இறந்தனர், மேலும் 13 பேர் படுகாயம் அடைந்த



நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடனடியாக இந்தக் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்ட வியூ என்ற நபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

விசாரணையில் இவர் மனநோயாளிகள் மையத்தில் இருந்து தப்பி வந்தவர் என்பது தெரியவந்தது. ஆனால் ஏன் தாக்குதல் நடத்தினார் என்பதற்கான காரணம் தெரியவில்லை.

# அமெரிக்காவுக்கு எதிரான வன்முறை; பாகிஸ்தானில் 23 பேரை பலியெடுத்தது




(இஸ்லாமாபாத்)

முகமது நபியை இழிவுபடுத்தும் விதமாக அமெரிக்கர் எடுத்த திரைப்படத்துக்கு எதிரான போராட்டம் பாகிஸ்தான் நாட்டை உலுக்கியுள்ளது.

அமெரிக்காவில் வெளியான 'Innocence of Muslim' என்ற திரைப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து உலகம் முழுவதும் முஸ்லிம் நாடுகளில் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் இந்தப் படத்துக்கு எதிராக இஸ்லாமியர்கள் ஒன்று திரண்டு பிரம்மாண்டமான பேரணிகளையும், கண்டன ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர்.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இஸ்லாமியர்களால் நடத்தப்பட்ட பேரணி பெரும் வன்முறையில் முடிவடைந்தது. இதில் 2 பொலிஸார் உட்பட 17 பேர் பலியாகினர்.

இதேபோல் பாகிஸ்தானின் மற்றொரு நகரமான பெஷாவரில நடைபெற்ற ஆர்ப்பாட்டமும் வன்முறையில் முடிந்தது. பெஷாவர் போராட்டத்தில் வெடித்த வன்முறைக்கு 6 பேர் உயிரிழந்தனர்.

இதேபோல் லாகூர், இஸ்லாமாபாத் போன்ற பல இடங்களில் நடைபெற்ற பேரணிகளில் மொத்தம் 200இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

# பாகிஸ்தானுக்கு எதிரான மசோதா அமெரிக்காவில் தோல்வி

(வோஷிங்டன்)

அமெரிக்க நாடாளுமன்றத்தில் பாகிஸ்தானுக்கு நிதியுதவி அளிப்பதற்கு எதிரான மசோதா தோல்வி அடைந்தது.

அமெரிக்க நாடாளுமன்ற மேல்சபையில் உறுப்பினர் ராண்ட் பால் மசோதா ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அதில் பாகிஸ்தானின் அபோதாபாத்தில் அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் குறித்து அமெரிக்காவுக்குத் தகவலளித்த மருத்துவர் ஷகில் அப்ரிதி என்பவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரை விடுதலை செய்யும் வரை, பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கி வரும் நிதியுதவியை நிறுத்தி வைக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

விவாதத்துக்குப் பின் இந்த மசோதாவுக்கு 10 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர், 81 பேர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து மசோதா தோல்வியடைந்தது.

மேலும் இதே மசோதாவில் அமெரிக்கத் தூதரகங்கள் மீது தாக்குதல் நிகழ்ந்த லிபியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கான நிதியுதவியை நிறுத்த வேண்டும்.

இத்தாக்குதலுக்கு காரணமானவர்களைக் கைது செய்த பின்தான், நிதி உதவியைத் தொடர வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இது குறித்து ராண்ட் பால் கூறுகையில், இந்நாடுகளுக்கு நிதியுதவி அளிப்பதற்கு அமெரிக்கக் குடிமக்களில் பெரும்பாலானோர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்நாடுகளுக்கு ஆதரவாக உள்ளமை ஏன் என்று தெரியவில்லை. இந்த விவகாரத்தில எனது போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# போராட்டக்காரர்கள் தாக்குதல்; பின்வாங்கியது இராணுவம்



(பெங்காசி)

லிபியாவில் போராட்டக்காரர்களுக்கும், இராணுவ படைப் பிரிவு ஒன்றிற்கும் இடையே நடந்த மோதலில் 4 பேர் உயிரிழந்தனர், 40 பேர் காயமடைந்தனர்.

லிபியாவின் பெங்காசி நகரில் இருந்து 15 கி.மீ தூரத்தில் உள்ள ஹாவாரி பகுதியில் இராணுவத்தைச் சேர்ந்த ரஃபல்லா அல்-சாஹாதி பிரிவினர் முகாம் அமைத்திருந்தனர்.

ரஃபல்லா அல்-சாஹாதி பிரிவில் உள்ள வீரர்கள் இராணுவத்தில் இணைவதற்கு முன் அரசுக்கு எதிரான தீவிரவாதக் குழுவாக செயற்பட்டு வந்தனர். இதனால் இவர்களின் அடக்குமுறையால் அப்பகுதி மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாயினர்.

இந்நிலையில் ஆயுதம் ஏந்திய 100இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் இராணுவப் படைப் பிரிவுமீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இறுதியில் போராட்டக்காரர்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் இராணுவப் படைப் பிரிவு அப்பகுதியிலிருந்து வெளியேறியது.

இதனைத் தொடர்ந்து முகாமில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் வெடிபொருள்களை போராட்டக்காரர்கள் கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

# 1300 அடி உயரமான கண்ணாடி கட்டடத்தில் ஏறி சாதனை

(பீஜிங்)

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஸ்பை டர்மேன் என்பவர் சீனாவில் 1,300 அடி உயர கண்ணாடி கட்டடத்தில் ஏறி புதிய சாதனை படைத்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 50 வயதுடைய ஆலென் ராபர்ட் என்பவர் உலகின் உயரமான கட்டடங்கள் மீது கயிறு, பாதுகாப்பு சாதனங்கள் ஏதுமின்றி ஏறிச் சாதனை படைப்பதை பொழுது போக்காக கொண்டுள்ளார்.

இதனால் 'ஸ்பைடர்மேன்' என்ற சிறப்புப் பெயரும் இவருக்கு உண்டு. மிகவும் சவால் நிறைந்த கட்டடமாக கருதப்படும் சீனாவின் செங்சோ நகரில் உள்ள 1,300 அடி உயரம் கொண்ட 'போர்டலேசா கோபுரம்' மீது ஏறி ராபர்ட் புதிய சாதனையை நிகழ்த்தி உள்ளார்.

இக்கட்டடத்தில் 400 அடிக்கு மேல் பயங்கரமாக வழுக்கும் தன்மையுடன் கூடிய கண்ணாடி மற்றும் உலோகத்தாலான வெளிப்புறச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் கை, கால்களை ஊன்றக்கூடிய வகையில் பிடிமானம் சற்றும் இல்லாததால், இந்த கட்டடத்தின் மீது ஏறுவது மிகவும் சவால் நிறைந்ததாக



கருதப்பட்டது.

இதனால் வேறு வழியின்றி கண்ணாடிச் சுவரில் சில சாதனங்கள் மற்றும் பாதுகாப்பு கயிறு போன்றவற்றின் துணையோடு, ராபர்ட் கட்டடத்தின் மீது ஏற ஆரம்பித்தார்.

முதல் 400 அடியை சிரமமின்றி ஏறி முடித்த ராபர்ட், பின் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து இரண்டு மணி நேரத்தில் உச்சியை சென்றடைந்து சாதனை படைத்துள்ளார்.

அங்கே அவருக்காக காத்திருந்த வரவேற்பு குழுவை சேர்ந்தோர் கைதட்டி ஆரவாரம் செய்து ராபர்டை வரவேற்றனர். இவரின் சாகசத்தை சீன தொலைக் காட்சி ஒளிபரப்பியது.

ராபர்ட் சீனாவில் இதற்கு முன் கடந்த 2007ஆம் ஆண்டில் ஷாங்காய் மாகாணத்தில் உள்ள 1,400 அடி உயரம் கொண்ட ஜின் மாவ் கோபுரத்தில் ஏறி சாதனை படைத்தார்.

கடந்த மார்ச் மாதம் துபாயில் உள்ள உலகின் மிக உயர்ந்த கட்டடமான புர்ஜ் கலிபா கோபுரம் மீது ஏறி உலக மக்களின் கவனத்தை கவர்ந்து பாராட்டு பெற்றார். 2, 716 அடி உயரம் கொண்ட இக் கட்டடத்தின் மீது ராபர்ட் ஏறும் போது பயங்கர பாலைவனக்காற்று வீசிக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தேடியது வெடிகுண்டு கிடைத்தது பச்சிளம் குழந்தை



ஆப்கானிஸ்தானில் நேட்டோ படை வீரர்கள் வெடிகுண்டுகளைத் தேடி அழிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, பிறந்து 2 நாட்களேயான பச்சிளம் குழந்தை பெற்று மீட்கப் பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் வாகேஷ் இராணுவ தளத்திற்கு அருகில் வீதியோரங்களில் தீவிரவாதிகள் வெடிகுண்டுகளைப் புதைத்து வைத்திருப்பதாக தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து அதை தேடி அழிக்கும் பணியில் நேட்டோ படையில் உள்ள போலந்து நாட்டு வீரர்கள் ஈடுபட்டனர்.

அப்போது புதர் மறைவில் ஒரு பொதி கிடந்ததைப் பார்த்ததும், அது வெடிகுண்டாக இருக்கலாம் என கருதி மிகவும் பாதுகாப்புடன் அதை எடுத்தனர். அப்போது துண்டில் சுற்றப்பட்ட நிலையில் பிறந்து 2 நாட்களேயான பெண்குழந்தை ஒன்று உயிருடன் இருந்தது.

உடனடியாக அக்குழந்தையை மீட்டு இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சை அளித்துள்ளனர். அக்குழந்தைக்கு தங்களது நாட்டின் பெயரை குறிக்கும் வகையில் 'போலோ' எனப் பெயரிட்டுள்ளனர் போலந்து நாட்டு இராணுவத்தினர்.

# தன்னம்பிக்கை, விடாமுயற்சியுடன் இளைஞர்கள் செயலாற்ற வேண்டும்

இளைஞர்கள் தன்னம்பிக்கை நிறைந்த உள்ளத்துடனும், விடாமுயற்சியுடனும் செயற்பட்டால் தான் அவர்கள் சார்ந்த கிராமத்தை எல்லாத் தேவைகளும் கிடைக்கப்பெற்ற சிறந்த கிராமமாக மாற்ற முடியும் என ஈ.பி.டி.பி.யின் அச்சுவேலிப் பிரதேச இணை அமைப்பாளரும், வலி. கிழக்குப் பிரதேசசபை எதிர்க்கட்சி உறுப்பினருமான இ.செல்வராசா (லிங்கேஸ்) தெரிவித்துள்ளார்.

புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகத்தின் 6 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் கழகத்தலைவர் இ.வினோதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாம் இன்று எமது கிராமங்களை எல்லாத் தேவைகளும் நிறைந்த கிராமமாகக் கட்டியெழுப்புவதற்குப் பிறர் கையை எதிர்பார்த்து நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்த நிலைக்கு எம்மைத் தள்ளியது யுத்தமே. இதிலிருந்து நாம் மீண்டெழ வேண்டுமாயின் தன்னம்பிக்கை நிறைந்த உள்ளத்துடனும், விடாமுயற்சியுடனும் செயற்பட வேண்டும்.

இன்று நாம் எல்லா வழிகளிலும் சுதந்திரமாகச் செயற்படக் கூடிய சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆதலால் முடிந்த வரை பிறர் தயவின்றி எமது கிராமங்களைச் செழிப்புள்ள கிராமங்களாக மாற்ற இளைஞர்கள் விடாமுயற்சியுடன் செயற்பட வேண்டும்.

எமது அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அழிந்து போன எம் தேசத்தையும், தமிழ் உறவுகளின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்ற நோக்குடன் கபடமற்ற உள்ளத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அவர் காட்டும் வழியிலேயே நாமும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம். தமிழ் மக்களுக்கான ஒரே ஒரு அமைச்சராக மக்களை நேசித்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் அ.அருள்ராஜ், புத்தூர் பிறப்பு-இறப்பு பதிவாளர் தி.அம்பலவாணர், புத்தூர் கிராம அலுவலர் எஸ்.சிவானந்தன், ஆவரங்கால் சமுர்த்தி உத்தியோகத்தர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (116)



மனோகரா விளையாட்டுக் கழகத்தின் 85ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றிய மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தினரைக் காணலாம். (12)

# வன்செயலால் பாதிக்கப்பட்ட 49 பேருக்கு நஷ்டஈடு

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சினூடாக புனர்வாழ்வு அதிகாரசபையானது ஒருங்கிணைந்த நிவாரணத்திட்டத்தின் கீழ் வன்செயலால் பாதிப்படைந்த 49 பேருக்கு வீடமைப்புக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவினை நேற்று வவுனியா பறன்நட்டகல் கிராமத்தில் வைத்து வழங்கியிருந்தது.

தமிழ், சிங்கள மக்களுக்கு முதற்கட்டமாக வீடமைப்பு மானியமாக 50 ஆயிரம் ரூபா காசோலையும் வழங்கியிருந்ததுடன், கடும் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான நிவாரணமும் வழங்கப்பட்டிருந்தது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர, அமைச்சின் செயலாளர் நிமல் கொடவலகெதர, புனர்வாழ்வு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஈ. ஏ. சமரசிங்க, அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஸ்குமார், அமைச்சின் நிர்வாகப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.எம்.பதூர்தீன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (160)

# சுயகௌரவத்தை இழக்காமல் கிழக்கில் ஆட்சியமைக்க ஆதரவு

## என்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலிந்து சென்று அரசாங்கத் தின் காலடியில் விழவில்லை. மாறாக சில வேண்டுகோ ளின் நிமித்தம் கட்சியின் சுயகௌரவத்தை இழக்காமல் மிகவும் முக்கியமான கோரிக்கைகளுடனேயே கிழக்கில் அரசு ஆட்சியமைக்க ஒத்துழைப்பு வழங்க முன் வந்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

முஸ்லிம் காங்கிரஸின் சிபாரிசின் பேரிலேயே கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் பதவி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நஜீப் ஏ மஜீத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள விடயத்தை நான் தான் நஜீப் ஏ மஜீத்துக்கு முதன் முதலாகத் தெரிவித்தேன்.

இரண்டாவது பகுதி பதவிக் காலம்.. அதாவது இரண்டரை வருட கால்த்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபை உறுப்பினர் ஒருவரே .முதலமைச்சராக இருப்பார். இதற்கான உடன்பாடு ஆளும் கட்சியுடனான பேச்சுவார்த்தையின் போது எட்டப்பட்டுள்ளது. அது மீறப்படுமானால் மிகவும் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் அனைவருமாக மேற்கொண்ட முடிவின்படியே அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாடு உடையாமலிருக்க...

இலங்கையின் வெளியுறவு அமைச்சும் இந்த விடயத்தில் தோல்வி கண்டுள்ளது.

எனவே தமிழ்த் தேசியவாதிகள் தமிழகத்தின் ஆதரவை பெருப்பித்துக்கொண்டு வருகின்றனர்.

இதனைத் தடுப்பதற்கு உரிய வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இலங்கையின் பாதுகாப்பு அமைச்சும், விடுதலைப் புலிகளின் செல்வாக்கு தமிழகத்தில் அதிகரிப்பதை தடுக்கத் தமிழ் மொழிமூலமான செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இன்று பாது காப்பான நாடுகளில் ஒன்றாக இருக்கிறது. இந்தநிலையில் தமிழகம் மீண்டும் விடுதலைப் புலிகளின் சொர்க்கமாக மாற்றப்படுவதற்கு இலங்கை இடமளிக்கக்கூடாது.

இதன்போது தமிழகத்தில் இயங்கும் விநாயகம் என்ற ழைக்கப்படும் சேகரப்பிள்ளை விநாயகமூர்த்தி என்பவரின் உத்தரவின்பேரில் திருகோண மலையில் ஈ.பி.டி.பி. தலைவர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவங் கள். போன்றவற்றை தடுக்க முடியும்.

கிழக்கில் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகியுள்ளமை தொடர்பில் கருத்துரைத்த அவர், முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள் என்று பார்க்காமல், சிங்கள அரசர்கள் தமிழ்ப்பெண்களை மணந்தனர்.

முஸ்லிம் வர்த்தகர்கள் சிங்களப் பெண்களை மணக்கின்ற னர்.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இரத்த உறவு இருக்கிறது போன்ற விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

இதன்போது இலங்கையின் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படும் என்று றொகான் குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

## மாகாணசபை...

என்றே நான் கூறுகிறேன். கடந்த காலம் முதல் வடக்கு, கிழக்கு மாகா ணங்கள் ஆளுநரின் ஆட்சியிலேயே இருந்து வந்தன. நாட்டின் ஏனைய பகுதிகளில் மாகாண சபைகள் இயங்கின.

இலங்கை என்பது சிறிய நாடு, இந்தியாவை போன்று பெரிய நாடு அல்ல. இதனால் இங்கு மாகாண சபைகள் அவசியமில்லை என்பதே எனது நிலைப்பாடு. காரணம் மாகாண சபைகள் கோராத பிரதேசங்களுக்கே அது கிடைத்தது.

கொழும்பில் இருக்கும் எமக்கு எதற்கு மாகாண சபை. மாகாண சபை என்பது வெள்ளை யானை இருக்கின்றது என்று கூறும் கதை போன்றது எனவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

வேறு பல முக்கிய நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் இன ஒற்றுமையின்மை ஏற்படலாம் என்பதால் தற்போது அவற்றை பகிரங்கப்படுத்த விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பதற்காக முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் குறித்து, கிழக்கு மாகாண மக்களிடம் நேரடியாக தெரிவிப்பதற்காக தமது கட்சியினர் விரைவில் கிழக்கிற்கு செல்லவுள்ளதாக அவர் கூறினார்.

## கூட்டமைப்பு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பற்றி எவ்வாறான அபிப்பிராயங்களை கொண்டிருக்கின்றன என்பது பற்றி அறியக்கூடியதாக இருக்கும்.

இந்த நிறுவனத்தில் எந்த மொழி சார்ந்தவர்கள் வேலை செய்கின்றார்கள் என்று பார்ப்பதைவிட அவர்களின் ஆய்வு பற்றிய நுணுக்கங்களே எமக்கு தேவையாக உள்ளது. அந்த சேவையை பெறுவதற்காகதான் இவர்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

## அவுஸ்ரேலியா...

அடங்குவர். கைதான இவர்கள் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, நீர்கொழும்பு கடற்பகுதியில் அவுஸ்ரேலியா நோக்கிப் பயணித்த படகொன்று வழி மறிக்கப்பட்டு அதிலிருந்து 35 பேர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டனர்.

நேற்றைய கைதுகளுடன் சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா சென்றவேளை கைதானவர்களின் எண்ணிக்கை 2254 ஆக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## மர்மப்பொருள்...

ந்த சிறுவர்கள் மன்னார் பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தலைமன்னார், பியர் பகுதியைச் சேர்ந்த 14-15 வயதான சிறுவர்களே காயமடைந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருத்தப்படாத மயான வீதி

(வரணி)

வரணி மாசேரி, கப்பத்தை மயானத்திற்குச் செல்லும் வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ளதால் மயானத்திற்குச் செல்வதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி நீண்ட பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகச் சேதமடைந்துள்ளதால் மாயனத்திற்குச் செல்லும் மக்கள் பெரும் சிரமப்பட்டு, நடைபாதையாகவே செல்வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வீதியில் மழை காலங்களின் போது இடுப்பு வரை வெள்ளநீர் தேங்கி நிற்பதால் அதனூடாகப் பயணிக்க முடியாத நிலையும் ஏற்படுகிறது.

தற்போது இவ்வீதி புனரமைப்புச் செய்யக்கூடிய நிலையில் இருப்பதால் உரியவர்கள் இந்த மயான வீதிக்கு மண்ணாவது பரப்பி மயானம் வரை உயர்த்தி மழைநீர் தேங்கி நிற்காவண்ணம் புனரமைப்புச் செய்ய உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (150)

# தங்கச் சங்கிலி அறுப்பு

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி புகையிரதத்தில் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி திருடர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்து கொள்வதற்காக திருகோணமலையில் இருந்து நேற்று மாலை புகையிரதத்தில் வந்த பெண் புகையிரதத்தின் யன்னல் ஓரமாக அமர்ந்திருந்த போது மருதானையில் வைத்து மூன்று பவுண் தங்க சங்கிலியை யன்னல் ஊடாகத் திருடன் அபகரித்துள்ளான்.

இவ்வறான சம்பவங்கள் புகையிரதத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் நிலையில் பயணிகளை அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்பதுடன் இது தொடர்பாகப் புகையிரதக் காவலர்கள் அறிவித்தல்களை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (160)

## வருட இறுதியில்...

ஆணையாளர் பணியகத்தின் ஆசிய பசுபிக், மத்தியகிழக்கு, வடஆபிரிக்க நாடுகளுக்கான கிளையின் தலைவர் ஹன்னி மெகாலி தலைமையிலான இந் தக் குழுவில் மூன்று அதிகா ரிகள் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா.பொதுச்சபை...

வுக்குத் தலைமையேற்று பொதுச்சபைக் கூட்டங்களில் பங்கேற்றுள்ள போதிலும், நாட்டின் தலைவர் தான் இதில் பங்கேற்க வேண்டும் என்பது கட்டாயமில்லை.

இதற்கு முன்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க போன்றவர்களும் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்காமல் இருந்துள்ளனர் என்று கூறியுள்ளார்.

# பொது எதிர்க்கட்சியில் இணைய ஐ.தே.க. நிபந்தனை விதிப்பு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி பொது எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ள வேண்டுமாயின், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள், ஒழுக்காற்று விசாரணைகளை எதிர்நோக்கியவர்களை அவர் தமது கட்சியில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற நிபந்தனையை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை முன்வைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த நிபந்தனை காரணமாக சரத் பொன்சேகா பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகிறார். அத்துடன் அவரைச் சுற்றி இருப்பவர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையை கடுமையாக விமர்சிப்பவர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டு, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள சிலர் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியில் இணைந்து, பொது எதிர்க்கட்சியில் தேர்தலில் போட்டியிடத் தயாராகி வருகின்றனர் எனக் கூறப்படுகிறது. இந்தத் தகவல் கிடைத்தை அடுத்து, ரணில் விக்ரமசிங்க கட்சியின் பொதுச் செயலாளர் ஊடாக இந்த நிபந்தனையை சரத் பொன்சேகாவுக்கு முன்வைததுள்ளார்.

எவ்வாறாயினும் சரத் பொன்சேகா தனிப்பட்ட ரீதியில் ஏற்படுத்தவுள்ள பொது எதிர்க்கட்சியில் இணையப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் ஏற்கனவே தீர்மானித்துள்ளன.

# அமைச்சர் றிசாத் மீது விசாரணை; சர்வதேச பிரதிநிதி வருகை



(கொழும்பு)

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் மீது மேற்கொள்ளப்படும் நீதிமன்ற விசாரணைகளை அவதானிப்பதற்காக ஜெனிவாவில் அமைந்துள்ள சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் பிரதிநிதி இலங்கை வந்துள்ளார்.

மேற்கு அவுஸ்ரேலியாவின் சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினரான மார்க் டிரவல், சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் பிரதிநிதியாக நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அமைச்சர் றிசாட் பதியுதீன் தொடர்பில் மன்னார் நீதவான் நீதிமன்றில் இன்று இடம்பெறவுள்ள நீதிமன்ற விசாரணைகளை அவர் அவதானிப்பார்.

மார்க் டிரவல் சர்வதேச ரீதியில் பல நீதிமன்ற செயற்பாடுகள் குறித்து அவதானிக்கும் ஒருவராக செயற்பட்டுள்ளார். அத்துடன், மலேசியாவின் முன்னாள் பிரதமர் அன்வர் இப்ராஹீம் தொடர்பிலான நீதிமன்ற விசாரணைகளில் இவரே சர்வதேச கண்காணிப்பாளராக செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கராஜில் திருடியவர் வசமாக மாட்டினார்

யாழ்ப்பாணம் ஆனைப்பந்திச் சந்தியிலுள்ள 'கராச்' ஒன்றிலிருந்து இரும்புக் கேடர்களை திருடிச்சென்ற ஒருவரை அப்பகுதி மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்றிரவு 10.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஆனைப்பந்தி சந்திப் பகுதியிலுள்ள கராச்சிலிருந்த இரும்புக் கேடர்களை திருடி தனது துவிச்சக்கர வண்டியில் வைத்து உருட்டிச் சென்றவர் மீது சந்தேகம் கொண்ட அப்பகுதி மக்கள் அவரை மறித்து விசாரித்த வேளை அவர் முன்னுக்குப் பின் முரணான தகவலைத் தெரிவித்துள்ளார்.

எனினும் தான் குறித்த கராச்சில் இரும்பு கேடர்களை திருடியதை ஒப்புக்கொண்டதுடன், வசாவிளானை சொந்த இடமாகவும், தற்போது கச்சேரி நல்லூர் வீதியில் வசித்து வருவதாகவும் மதுபோதை காரணமாக திருடிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

# இளைஞர் குழுக்களின் மோதலை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் இளைஞர் குழுக்களுக்கிடையிலான மோதல்கள் குறித்து பல்வேறு தரப்பினரும் கவலையடைந்துள்ளனர்.

குறிப்பாக பிரதான வீதிகள், ஆலயங்கள், தனியார் கல்வி நிலையப் பகுதிகளில் ஒன்று கூடும் இளைஞர் குழுக்கள் தமது பழைய பகைகள் காரணமாக திடீரென மோதலில் ஈடுபடுவதுடன், தவறான வார்த்தைப் பிரயோகங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பல்வேறு தரப்பினரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அண்மையில் கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத் திருவிழாவில் சந்தித்துக்கொண்ட இரு இளைஞர் குழுக்கள் முன்பிருந்த பகை காரணமாக அவ்விடத்தில் கைகலப்பில் ஈடுபட்டதுடன் இழிவான வார்த்தைப் பிரயோகமும் செய்துள்ளனர். இதனால் ஆலயத்திற்கு வந்த மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இதேபோன்றே கடந்த சனிக்கிழமை கொக்குவிலில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றின் பரிசளிப்பு விழா நிகழ்வின் போது மாணவர்களும் பிரதம அதிதிகளும், பெற்றோர்களும் கலந்துகொண்டிருந்த வேளை கல்வி நிலையத்தின் வெளிப்பக்கம் கூடிய இரு இளைஞர் குழு முன்பிருந்த பகை காரணமாக தமக்குள் மோதிக்கொண்டு கூக்குரலிட்டு அப்பிரதேசம் முழுவதும் தடிகளுடனும் பொல்லுகளுடனும் ஓடியதுடன் குறிப்பிட்ட கல்வி நிலையத்திலும் புகுந்து அங்கிருந்தவர்களை கலக்கமடைய வைத்துள்ளனர்.

இவ்வாறான குழுக்களின் மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் உரியவர்கள் தகராறுகளுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# இந்தியாவின் சுழலில் சுருண்டது இங்கிலாந்து

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கொழும்பில் நேற்றிரவு நடந்த ருவென்ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி 90 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணிக் கப்டன் புரோட் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

கம்பீரும், இர்பான் பதானும் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினார்கள். இந்தியாவின் ஸ்கோர் 24 ரன்னாக இருக்கும்போது பதான் 8 ரன்னில் ஆட்டம் இழந்தார். அடுத்து 2 ஆவது விக்கெட்டுக்கு காம்பீருடன் விராட் ஹோலி ஜோடி சேர்ந்தார். இருவரும் இங்கிலாந்து அணியின் பந்து வீச்சை விளாசித் தள்ளினர். 40 ரன் எடுத்திருக்கும்போது ஹோலி ஸ்வான் பந்தில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து கம்பீருடன், ரோகித் சர்மா ஜோடி சேர்ந்தார். கம்பீர் 45 ரன் எடுத்திருக்கும்போது பின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து டோனி களம் இறங்கினார். ரோகித் சர்மா கடைசி ஓவரில் தலா ஒரு சிக்ஸ், பவுண்டரி அடித்து அரைச்சதம் அடித்தார். டோனி 4 ஆவது பந்தில் ஆட்டம் இழந்தார். அவர் தன் பங்குக்கு 9 ரன் எடுத்தார். அடுத்து ரெய்னா களம் இறங்கினார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் இந்தியா 4 விக்கெட் இழப்பிற்கு 170 ரன் எடுத்தது. ரெய்னா 1 ரன்னுடனும், ரோகித் சர்மா 55 ரன்னுடனும் அவுட்டாகாமல் இருந்தனர். பின்னர் 171 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. முதல் ஓவர் கடைசி பந்தில் இங்கிலாந்திற்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஹால்ஸ் டக் அவுட் ஆகி வெளியேறினார்.

அதன்பின் இங்கிலாந்து விக்கெட்டுகள் சீட்டு கட்டுபோல் மளமளவென சரிந்தது. எனவே இங்கிலாந்து அணி 80 ரன்னில் சுருண்டது. 14.4 ஓவர்களே இங்கிலாந்து வீரர்கள் தாக்குப்பிடித்தனர். லூக் ரைட் (6), மோர்கன் (2), பர்ஸ்டோ (1), பட்லர் (11), பிரெஸ்னன் (1), ஸ்வான் (0), டெர்ன்பக் (12) ஆகியோர் சொற்ப ரன்களில் ஆட்டம் இழந்தனர். இந்திய அணி தரப்பில் ஹர்பஜன் சிங் சிறப்பாக பந்து வீசி 4 விக்கெட் வீழ்த்தினார். 12 ரன்கள் மட்டுமே விட்டுக் கொடுத்தார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். மற்றும் பதான், சாவ்லா தலா 2, அசோக் டின்டா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# 13 ஓட்டங்களால் பாகிஸ்தான் வெற்றி

நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

உலகக் கிண்ண ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டமொன்று நேற்று பல்லேகல மைதானத்தில் நடைபெற்றது. இதில் நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நசீர் ஜெம்ஷெட் 56, மொகமட் ஹபீஸ் 43, இம்ரான் நசீர் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரிம் சௌத்தி, ஜேக்கப் ஓரம் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 178 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இதில் நிகோல் 33, மக்கலம் 32, டெய்லர் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக நசீர் ஜெம்ஷெட் தெரிவானார்.

# நாளொன்றுக்கு 300 விவாகரத்து

(கொழும்பு)

இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 300 விவாகரத்துகள் இடம்பெறுவதாக மேல்மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

திருமண பந்தத்தில் இணையும் இருவருக்கிடையில் ஏற்படும் புரிந்துணர்வற்ற தன்மையே விவாகரத்துகள் அதிகரிப்பதற்கு காரணம் எனவும் அந்த ஆய்வின் போது தெரியவந்துள்ளது.

திருமணமாகி ஒரு வருடத்துக்குள் பெரும்பாலான விவாகரத்துகள் இடம்பெறுவதாகவும் 18 வயதுக்குக் குறைந்த தாய்மார் 3,892 பேர் இலங்கையில் இருப்பதாகவும் மேல் மாகாண சமூக சேவையாளர் பணிப்பாளர் அனுஷா கோகில பெர்னாண்டோ தெரிவித்தார்.

# இலங்கைக்கு திரும்பிய அகதிகளுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லையா?

அவுஸ்ரேலியா, கிறிஸ்மஸ் தீவில் இருந்து நௌரு தீவிற்கு அனுப்பும் திட்டத்துக்கு மறுப்பு தெரிவித்து மீண்டும் இலங்கை திரும்பிய அகதிகள் தொடர்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக அதிக அந்தஸ்து கோரி விண்ணப்பித்திருந்த இந்த அகதிகள், இலங்கையில் இடம் பெறுகின்ற அச்சுறுத்தல்களை காரணம் காட்டி இருந்தனர்.

இலங்கைக்கு மீண்டும் செல்வதில் அச்சுறுத்தல் இருப்பதாகத் தமது விண்ணப்பங்களின் அவர்கள் சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்த நிலையில் பசுபிக் திட்டத்தின் கீழ் அவர்கள் நௌரு தீவுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்த போதும், இந்த நௌரு தவுக்கு செல்ல விரும்பாத இலங்கையர்கள் நாடு திரும்புவதாக அறிவித்தனர்.

அதன் அடிப்படையில் நேற்று முன்தினம் 18 அகதிகள் இலங்கைக்கே அனுப்பி வைக்கப்பட்டனர். இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவுஸ்ரேலிய எதிர்க் கட்சியின் பிரதித் தலைவர் ஜுலி பிசொப், இலங்கைக்கு மீண்டும் திரும்பிய அகதிகளுக்குத் தற்போது அச்சுறுத்தல் இல்லையா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர்களின் விண்ணப்பத்தின்படி, இலங்கையில் காணப்பட்ட அச்சுறுத்தல் நௌரு தீவில் இல்லாத போதும், ஏன் அவர்கள் இலங்கைக்கே திரும்பிச் சென்றனர் என்று பிசொப் வினவியுள்ளார்.


# தேவை

## வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

**1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு**

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.